விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 08 திங்கட்கிழமை (21.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 92

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# இராணுவத்தின் ஆதரவுடன் கருணா குழுவுக்கு தனிமுகாம்

## அம்பலப்படுத்துகிறது சண்டேலீடர்

(கொழும்பு)

**அம்பாறை வெலிக்கந்தை தீவுச்சேனையில் தனிமுகாம் ஒன்றில் இராணுவத்தின் ஆதரவுடன் கருணா குழுவினர் செயற்பட்டுவருவதை கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டேலீடர் ஆங்கில நாளிதழ் நிழற்படங்களுடன் அம்பலப்படுத்தியிருக்கிறது.**





கடந்த ஏழு மாதங்களாக கருணா குழுவினர் பொலநறுவை மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தீவுச்சேனை எனும் இடத்தில் இருந்து செயற்பட்டுவருகிறார்களெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலநறுவையில் ஹபரண - வாழைச்சேனை பிரதான சாலையிலிருந்து 10 கிலோமீற்றர் வடக்காகவுள்ள அக் கிராமத்திற்கு சண்டேலீடர் செய்தியாளர்கள் கடந்த வாரம் விஜயம் செய்திருந்தனர்.

செய்தியாளர்கள் அக்கிராமத்திற்குள் சென்றவுடன் முகாம் வாசலில் ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்கள் காணப்பட்டனர்.

அந்தக் கிராமத்தில் கருணாவுடன் இணைந்து அவரின் நெருங்கிய சகாவான மங்களன் மாஸ்ரரும் செயற்பட்டுவருகிறார்.

கருணாவைச் சந்திக்கச்சென்ற சண்டேலீடர் செய்தியாளர்களிடம் அவர்களைச் சந்திக்க நேரமில்லை எனக்கூறி திருப்பி அனுப்பிவிட்டனர்.

கடந்த பெப்ரவரி 7இல் கிழக்கில் இடம்பெற்ற கௌசல்யனின் படுகொலை (14 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகார பகிர்வு வேண்டும் ஆனால் புலிகளுக்கல்ல

### ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள்ளே அதிகாரப் பரவலாக்கல் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் அது விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக அமையக்கூடாது என புத்தசாசன, மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவருக்கும் தாம் நம்பிக்கை வைத்திருக்கும் கொள்கையின் அடிப்படையில் செயலாற்றும் உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பரவலாக்கப்பட்டு நாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் ஏற்கனவே நாட்டினைப் பிரித்து வைத்துள்ளனர். தமிழர்கள், (14 ஆம் பக்கம்-பார்க்க)

## மாணவர்கள் மதுபோதையில்? காரைநகரில் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் இளம்பெண் ஒருவருடன் சேஷ்டைபுரிய முற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும் அப்பெண்ணின் உறவினர்களுக்கும் இடையே நேற்றுக் கைகலப்பு இடம்பெற்றது.

மதுபோதையில் சென்றதாகக் கூறப்படும் மாணவர்களில் இருவர், வெளிநாட்டிலிருந்து வந்த தமிழ் யுவதியுடன் சேஷ்டை புரிய முயன்றனர். இதனால் பெண்ணின் உறவினருக்கும் மாணவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மாணவர்களில் இருவரைக் கைதுசெய்ததுடன், காரைநகர் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டுசென்று விசாரணை மேற்கொண்ட பின் அவர்களை விடுவித்ததாகக் கூறப்பட்டது.

நண்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து மாலை அங்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பிய பிரஸ்தாப மாணவர்கள் காரைநகர் வலந்தலைச் சந்தியில் வானொன்றை மறித்து அதனைத் தாக்கமுற்பட்டதாகவும், இதையடுத்து அப்பகுதி மக்கள் மாணவர்களைத் தாக்கியதாகவும் (14 ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தரைத் தடுத்து நிறுத்த துறைசார் ஒன்றியங்களுக்கு அனுமதி

### வேண்டும் என்கிறது மருத்துவபீட மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

துணைவேந்தரைத் தடுத்துநிறுத்துதல், அவரின் செயற்பாடுகளை முடக்குதல், வாயில் கதவுகளைப் பூட்டுதல் போன்றவற்றிற்கு துறைசார் மாணவர் ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் நேற்றுக்கூடித் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானங்கள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி தீர்மானங்களைச் சாதகமாகப் பரிசீலனைசெய்து தமது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைக் கோரியிருக்கிறது.

நேற்று நடைபெற்ற மருத்துவபீட மாணவர் ஒன்றிய பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபுகள் வருமாறு,

◆ துணைவேந்தரை அலுவலகத்திற்குள் செல்லவிடாது தடுத்துநிறுத்துதல். அவரின் செயற்பாடுகளை முடங்கச் செய்தல், (14 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி முரண்பாடுகளை பேசித் தீர்க்கவேண்டும்

### நீதி அமைச்சர் டி.ஜே.செனவிரட்ன

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளால் இக்கூட்டணிக்கு பெருமளவில் தீமைகள் ஏற்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் தொடரும் இழுபறிகள் சுதந்திரக்கட்சியை மோசமாகப் பாதித்துள்ளன. இவை உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும். நாடு முழுவதுமே இவர்களது பனிப்போரை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கிறது. இதனால் இருதரப்பினரும் உடனடியாகப் பேசி தமது (14 ஆம் பக்கம் பார்க்க)

## சலூனை அடித்து நொருக்கியவர் 50 ஆயிரம் ரூபாவை இழந்தார்

(துன்னாலை)

சிகை அலங்கரிப்பு நிலையமொன்றினை அடித்து நொருக்கிய அதன் கட்டட உரிமையாளர் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளருக்கு நட்டஈடாக 50 ஆயிரம் ரூபா வழங்கிய சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை தொண்டமனாறுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடத்திவருபவரிடம் அதன் கட்டட உரிமையாளர் தமது கடையைவிட்டு வெளியேறுமாறு மூன்று நாள் அவகாசம் கொடுத்துள்ளார். எனினும் அக்கடையின் உரிமையாளர் (14 ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரதத்தில் 2 கிளைமோர்


(மட்டக்களப்பு)

கொழும்பு - மட்டக்களப்பு இடையேயான இரவு தபால் புகையிரதத்தில் பயணம்செய்த பயணி ஒருவரிடமிருந்து இரண்டு கிளைமோர் குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வெலிக்கந்தை கரபொல கிராமத்தைச் சேர்ந்த இயங் கொடகே நந்த என்ற பயணியை பொலநறுவை பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட புகையிரதம் பொலநறுவை ரயில்நிலையத்தில் நிறுத்தப்பட்டது. அப்போது பொலிஸார் பயணிகளின் பொதிகளை சோதனை (14 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR யாழ் கொழும்பு



தினசரி விமான சேவை

எக்ஸ்போ எயார்

Your friend in the skies...

T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi.com,

வானத்தில் உங்கள் நண்பன்...

# சுவிற்சர்லாந்தின் புகலிட சட்டங்கள் சர்வதேச சட்டங்களை கட்டுப்படுத்துமா?

(கொழும்பு)

சுவிற்சர்லாநதின் அகதிகள் தொடர்பான புதிய சட்டங்கள சர்வதேச புகழிலிடச் சட்டங்களை மீறுவதாக அமையலாமென அகதிகளுக்கான ஐக்கிய நாடு களின் உயர்ஸ்தானிகராலயம தெரிவித்திருக்கிறது.

அகதிகள் குடியேறுவதைத் தடுக்கும் பொருட்டு சுவிற்சர் லாநது அங்கீகரித்துள்ள புதிய சட்டங்கள் புகலிடம் கோருவதற் கான சர்வதேச சட்டங்களை கட்டுப்படுத்தலாமெனவும் உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்திருக கிறது.

சுவிற்சர்லாந்து பாராளுமன றத்தினால் கடந்த வியாழனன்று அங்கீகரிக்கப்பட்ட புதிய சட்டங் களில் சில புகலிடம் கோருவதை யும் குடியேற்றங்களையும் தீவிர மாகக் கட்டுப்படுத்துமெனவும்.


உயர்ஸ்தானிகள் ஆலயம் மேலும் தெரிவித்திருக்கிறது. இப் புதிய சட்டங்கள் மிகுந்த கவலை அளிப்பதாக உயர் ஸ்தா னிகர் ஆலயத்தின் பேச்சாளர் ரொன றெட்மென்ற் தெரிவித்தி ருக்கிறார்.

புதிய சட்டங்களின்படி புக ழிடம் கோரும் ஒருவர் கடவுச் சீட்டு நபரை அடையாளப்படுத் தும் ஆவணங்கள் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரி விக்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் நிராகரிக் கப்பட்டு, நாட்டை விட்டு வெளி யேறவேண்டுமென நிர்ப்பந்திக் கப்படும் பட்சத்தில் அக்கட்ட ளைக்கு இணங்கத் தவறுபவர் களுக்கு நல நோக்குக் கொடுப் பனவுகள் நிறுத்தப்படும் வகை யிலும் புதிய சட்டங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

இதேவேளை, புகழிடம் கோரும மக்களைவிட சுவிற்சர்லாந்து வங்கிகளின் இரகசியங் களையும் தனித்துவத்தையும் பாதுகாப்பதே மிக முக்கியமான சுவிற்சர்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் டிக் மாட்ரி தெரிவித்திருக்கிறார். (க-7)







# பொதுக் கட்டமைப்பின் ஊடாக சமாதான முயற்சிகள் பலமடையும்

## ஹேவ ஜாவான் ஜியன் நம்பிக்கை

(பெல்ஜியம்)

சுனாமி மீள் புனரமைப்பு நடவடிக்கைகளில் சகல கட்சி களையும் உள்ளடக்கிய பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத் துவதனுடாக இருதரப்பினரிடை யேயும் பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பி அவை தடைப் பட்டுபபோயுள்ள சமாதான முயற சிகளுக்கு பலமாக அமையும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளி உறவுகளுக்கான பிரதிப் பணிப்பாளர் ஹேவஜாவான்ஜி யன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த 17 ஆம் திகதி சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பின் போது தமிழ்ச் செல்வன் அரசிடம் சமர்பபிக்க வேணடிய பொதுக் கூடடமைப்பின் தற்போதைய நிலவரம் பற்றி அவ ருக்கு விளக்கிக் கூறினார். அத் துடன் இதற்கு புலிகள் தமது அதி கூடிய விட்டுக் கொடுப்புடன் செயற் பட்டு வருகின்றனர். செயற்படுவர் என்றும் உறுதி யளித்தார்.

அரசின் கட்டுப் பாடடு பகுதியில தொடர்ந்தும் தமது உறுப்பினர்கள் கொலை செய்யப பட்டு வரும் சம்ப வங்கள் பற்றி தமிழ்ச் செல்வன் தெரிவிக்கையில்.


ஆயுதக்குழுக் கள் தொடர்பான போர் நிறுத்த உடன்படிக்கை யின் 1.8 ஆவதுபிரி வினை அரசாங் கம அமுல்படுத்து வதில்லை என் றும், சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட அரசாங்கம் முன்வரல் வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி யிடம் தெரிவித்தார்.

அதற்கு இருதரப்பினரும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்து வதில் அர்ப்பணிப்புடன் செயற் படுகின்றன என தாம் நம்புவ தாக பதிலுக்கு ஜொவான் ஜியன் தெரிவித்தார்.

அத்துடன், குறுகிய அரசி யல் நோக்கங்களின்றி செயற் படல்வேண்டுமென்றும் இருதரப் பினரையும் அவர் கேட்டுக் கொண்டார். கடந்த 17 ஆம் திகதி யன்று காலையில் புலிகளின் குழுவினர் பெல்ஜியத்தின் ஆசி யாவிற்கான வெளிவிவகார பிரி வின் தலைவர் ஜொகான் மரிக் கௌ உடனும் ஐரோப்பிய ஒன்றி யத்தற்கான லக்ஸ்ஸம் பேக் கின் ஆசிய செயற்குழுவின் தலைவர் ஹென்றி ஸுமேக்கரு டனும் பெல்ஜியத்தின் அபிவி ருத்தி அமைச்சர் பியர் வீசனு டனும் பேச்சுக்களை நடாத்தி னர்.

பொதுக்கட்டமைப்பு தொடர் பான வகைமுறைகளை இவர் கள ஆராயத்திருந்ததுடன், இத் தகைய பொதுக்கட்டமைப்பு மூலம இருதரப்பினரிடையேயும் நம்பிக்கையைக்கட்டியெழுப்பி சமாதான செயற்பாடுகளை முன் னெடுக்க புலிகள் அர்ப்பணிப்பு டன் ஆதரவாக செயற்படுவர் என றும் புலிகள் குழுவினர் அங்கு உறுதியளித்தனர். (க-7,4)





## இராசி பலன்

21.03.2005

பங்குனி 08, திங்கட்கிழமை

மரணயோகம் பிற்பகல் 5.03 மணிவரை

ஏகாதசி முன்னிரவு 10.16 மணிவரை

இராகுகாலம் 07.47 - 09.17 மணிவரை

சுபநேரம் 12.17 - 1.47 மணிவரை

ஏகாதசி விரதம்.

| | |
|---|---|
| மேடம் | உடல் நலக்குறைவு, மனக்கிலேசம், மாதா சுகம், காரிய தாமதம். |
| இடபம் | குடும்ப மகிழ்ச்சி, நல்ல முயற்சி, எடுத்த காரியம் கைகூடும், பிரயாண நன்மை. |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, நண்பர்கள் விவாதம், முயற்சி தாமதம், கௌரவக்குறைவு. |
| கடகம் | செய்தொழில் நன்மை, காரிய சித்தி, கலந்துரையாடல், தேகநலன். |
| சிங்கம் | சத்துரு ஜெயம், முயற்சிதாமதம், பண விரயம், நித்திரைக்குறைவு. |
| கன்னி | நல்லகாரியம், உறவினர் சந்திப்பு, போசனசுகம், புதிய விடயம். |
| துலாம் | நிலைமாற்றம், தொழில் நன்மை, நல்ல செய்தி, காரிய சித்தி. |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், பித்த ரோகம், பிரயாணம், காரிய தாமதம். |
| தனுசு | மனக்குழப்பம், எதிர்பாராத அச்சம், முயற்சி தாமதம், வாகன பயம். |
| மகரம் | உறவினர் வருகை, நண்பர்கள் சந் திப்பு, காரிய அனுகூலம், செல்வாக்கு. |
| கும்பம் | காரிய சித்தி, தொழில் நன்மை, உடல் நலம், மனமகிழ்ச்சி. |
| மீனம் | பெரியோர் வெறுப்பு, மனக்கிலேசம், முயற்சி தாமதம், வியாபார விருத்தி. |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்



## வாகன விபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

அத்துருகிரிய அறங்களச் சந்தியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல் லப்பட்டுள்ளார்.

மேலும் இருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேகமாக சென்றகார் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அருகிலிருந்த மதிலுடன் மோதி யதினாலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்து நடந்த இடத்தில் வேலைசெய்து கொண்டி ருந்த ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். காரில பயணம் செயத இருவரும் படுகாயமடைந்தனர்.(க8)



இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக அமைக்கப்பட டுள்ள அறிவாலயமும் அரும் பொருள் காட்சியகமும் நேற்றுக்காலை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

நூலகத்தை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியும், அரும் பொருள் காட்சியகத்தை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி மகேஸ்வரக்குருக்களும் வைபவ ரீதியாகத் திறந்து வைத்துப் பார்வையிடுவதையும், அங்கு அமைக்கப்பட்டுள்ள பரராஜசேகர மன்னன, செகராஜசேகர மன்னன் ஆகியோரின் உருவச்சிலைகளைத் திரைநீக்கம் செய்து வைத்த கலைபண்பாட்டுக்கழகப் பொறுப் பாளர் புதுவை இரத்தினதுரை சிலை அருகே நிற்பதையும், யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ் அரும் பொருள் காட்சியகத்தைப் பார்வையிடுவதையும், இந் நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் உட்பட இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியின ரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஞா.ஐங்கரன்)

## சுனாமிக்குப் பின் இலங்கைக்கு வரும்

# சுற்றுலாத்துறைப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் இலங்கைக்கு வரும சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித துள்ளதாக சுற்றுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த மாதம் 36 ஆயிரத்து 600 சுற்றுலாப பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோா அமெரிக்காவையும், கனடாவையும் சேர்ந்தவர்கள்.

ஆசிய நாடுகளில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் பலமடங்காக அதிகரித்துள்ளது எனவும் அமைச்சு மேலும் தெரி வித்துள்ளது. (க-60)

# வாக்குறுதிகளை காப்பாற்றாத அரசு

# வாக்கெடுப்பு நடத்த முற்படுவது ஏன்?

(கொழும்பு)

அரசாங்கம் அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துவது தொடர்பாக பேசமுன் மக்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது வழங்கிய பல உறுதிமொழிகளை மறக்க வைப்பதற்காகவே அபிப்பிராய வாக்கெடுப்பு மேற்கொள்வது தொடர்பாகப் பேசுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று மாதத்திற்குள் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவும், 31 இலட்சத்து 20ஆயிரம் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுமெனவும் முன்னர் உறுதி வழங்கப்பட்டது.

மேலும் தனியார் மயமாக்கலை நிறுத்துவதுடன், 850 ரூபாவிற்கு உரத்தை வழங்குவதாகவும் உறுதிவழங்கப்பட்டது. எனினும் இந்த உறுதிமொழிகளில் ஒன்றையேனும் நிறைவேற்றாத அரசாங்கம் தற்போது அபிப்பிராய வாக்கெடுப்பு எனும் ஏமாற்று வலைக்குள் நாட்டை தள்ள முயற்சிப்பதாகவும் பராளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

# ஜனாதிபதி நிதியில் ஊழல்கள் என்கிறார் ஜீ.எல்.பீரிஸ் எம்.பி.

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1978ஆம் ஆண்டு பராளுமன்றச் சட்டத்தின்படி இந்த நிதியம் அமைக்கபபட்டது. இந்நிலையில் குறிப்பிட்ட நிதியத்தில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் குறித்து அரச கணக்காய்வாளர் தகவல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார்.

அவரின் கூற்றுப்படி அபிவிருத்தி சீட்டிழுப்பில் கிடைத்த 10 இலட்சத்து 444ரூபா தொடாபில் எந்தவிதமான பதிவுகளும் இல்லை. 24மில்லியன் ரூபாய்கள் ஜனாதிபதி செயலகத்துக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அது பதிவில் இடம் பெறவில்லை.

சுமார் 500 மில்லியன் ரூபா கணாமல் போயுள்ளது என்றும் கணக்காய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளாா.

குறிப்பிட்ட ஜனாதிபதி நிதியினைக் கண்காணிக்கும் அதிகாரம் சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுச்சபை ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்தசபை 2001ஆம் ஆண்டின் பின்னர் கூடவில்லை என்பதும் இது பாரிய சட்டமீறலாகக் கருதப்படுவதாகவும் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

(க-7,4)

# ஆய்வுகூடப் பரிசோதகர்கள்

# இன்று முதல் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமைபுரியும் மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதகர்கள் இன்று திங்கட்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள திட்டத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையிலேயே இவ்வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்க மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதகர்கள் சங்கச் செயலாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இவ்வேலை நிறுத்தம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு புஞ்சி பொரல்லையிலுள்ள சங்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(க-9)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"பொறுப்பனோ யான்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை வட்டு. இந்துக்கல்லூரி வள்ளியம்மை மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலி.பேராயா கலாநிதி ச.ஜெபநேசன் தலைமயில் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலாளர் சி.ஏ.மோகனறாஜ்ஜும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-8)

# பொதுக் கட்டமைப்பின் மூலமே சமாதானத்தை உருவாக்க முடியும்

## -ஐரோ.ஒன்றியப் பிரதிநிதி

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் பங்குபற்றும் பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலமே சமாதான முயற்சியில் பரஸ்பர நம்பிக்கையினைக் கட்டியெழுப்ப முடியும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை பிரஸ்லஸில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(ற-4)

# ஆலோசனைக் கூட்டம்

(சுதுமலை)

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளான கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி பகுதிகளில் இயங்கும் உணவு தயாரிப்பு நிலையங்கள், பெற்றோலிய நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளின உரிமையாளர்களிற்கு இவ்வருட சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று மாலை 2மணிக்கு கொக்குவில் பிரதேச சபை உப அலுவலக நூலக கேட்போர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில பிரதேச செயலக சூழல் பாதுகாப்பு அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உப அலுவலக பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமம் தொடர்பான அறிவுரைகளை வழங்கவுள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு தனித்தனியே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கடிதம கிடைத்தவர்கள் தவறாது மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொள்ளவேண்டும் என பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து அறிவுறுத்தியுள்ளார். (க-252)



க.பொ.த உயர்தரம் - 2004 பரீட்சையில் தேசிய நிலையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில், கலைப்பிரிவில் மாவட்ட நிலை-2, தேசிய நிலை-7ஐ பெற்ற புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மாணவி செல்வி மயில்வாகனம் வதனகீர்த்தனாவிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதக்கம் சூட்டிக் கௌரவித்து சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



மக்கள் வங்கியின் சிசு உதானக் கணக்கு அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது மக்கள் வங்கி அதிகாரி, கணக்கின் பொறுப்பாசிரியர் அ.ஆனந்தராஜாவுக்கு பரிசுப் பொருள் ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அன்னை பூபதியின் நினைவுநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சு.புவி தலைமயில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரினை மாவீரர் 2ஆம் லெப். சண்டியாவின் தாயார் திருமதி றீற்றாம்மா ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

ஈகைச்சுடரினை மாவீரர் 2ஆம் லெப்.கலையின் தாயார் திருமதி கமலாவும், மாவீரர் கலைமதியின் தாயார் திருமதி சிதம்பரமும் ஏற்றிவைத்தார்கள்.

அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர் பயஸ் அணிவித்தார். (க)

# தபால் ஊழியர்களுக்கு எதிராக

# கடும் ஒழுக்காற்று நடவடிக்கை

## எடுக்கப்படும் என்கிறது தொலைத்தொடர்பு அமைச்சு

(கொழும்பு)

அண்மையில் சுகவீனப் போராட்டம் என்ற போர்வையில் சதியில் ஈடுபட்ட தபால் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தபால் தொலைத்தொடர்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொளளப்பட்டதற்கு சதித்திட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் யாரென்பது குறித்து விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் சி.மாலியத்த தெரிவித்தார்.

இச்சதி முயற்சியில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விபரங்கள் கிடைத்ததும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இச் சுகவீனப் போராட்டம் காரணமாக தபால் விநியோகம் பாதிக்கப்பட்டதுடன், அந்நேரத்தில் பலர் கடமைக்குச் செல்ல முற்பட்ட போதும் சதிமுயற்சியாளர்கள் அவர்களைத் தடுத்ததன் காரணமாக அவர்களால் கடமைக்குச் செல்ல முடியாதிருந்ததாகவும் தபால் தொலைத்தொடர்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.(க-7)

# 1300 கிராம சேவகர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன

(கொழும்பு)

பொது நிர்வாக சேவையில் ஆயிரத்து 300 கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன என்றும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக உள்நாட்லுவல்கள் அமைச்சர் மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிராம சேவகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஏற்கனவே தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்துவதன் மூலம் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இதேவேளை, நாட்டில் 308 பிரதேச செயலகங்கள் உள்ளன. இவற்றில் முழுமையான தகுதியுள்ள பிரதேச செயலாளர்களாக 90 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க)

# "ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு"



இயேசுவின்மீது கொண்டிருந்த அன்பை மரியா நறுமண தைலம் பு'சி, பாதங்களைக் கூந்தால் துடைத்து வெளிப்படுத்துகிறார்.

விலையுயர்ந்த நறுமணத் தைலமும், ஆண்களுக்கு முன்னால் பெண்கள் கூந்தலை அவிழ்ப்பதும் முறையற செயலாக கருதப்பட்டாலும், இயேசுவின் மீதிருந்த அன்பை வெளிப்படுத்த இதைவிட மேலான வழியை மரியா அறியவில்லை. இயேசுவும் இவருடைய அன்பை ஏற்றுக் கொள்கிறார்.

## தவக்காலச் சிந்தனை

கடவுளை அன்பு செய்வோர், அந்த அன்பினை பிறரன்பு செயல்கள் மூலமாக வெளிப்படுத்த வேண்டும். செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் என்ற பவுலடியாரின் சிந்தனைக்கேற்ப கடவுள்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தையும், அன்பையும் நம் செயல்கள் வழியாக எடுத்துரைப்போம்.

காவலன்

## இன்று ஒரு தகவல்

# ஆபத்தில் உதவி

ஒரு ஆள் தனியாக வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு காடு. அதைத் தாண்டி மறுபக்கம் போக வேண்டும். இருண்டுவிட்டது.அந்தக்காட்டில் மிருகங்கள் அதிகம்.அதனால் இவனுக்கு தனியாகப் போகப் பயம். என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். சிறிது நேரத்தில் இன்னொருவனும் தனியாக வந்து கொண்டிருந்தான். "நல்லவேளை ஒரு துணை கிடைத்தது"என்று நினைத்தான் இவன்.

"என்ன? நீயும் இந்தக் காட்டின் வழியே தான் போக வேண்டுமா?" என்று கேட்டான்.அவன் 'ஆமாம்' என்றான். "அப்படியென்றால் இந்த நிமிடத்திலிருந்து நாமிருவரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் துணையாக இந்தக் காட்டின் வழியே போவோம். எனக்கு ஆபத்து வந்தால் நீ துணை. உனக்கு ஆபத்து வந்தால் நான் துணை. ஆபத்து வந்தால் ஒருவருககொருவர் உதவிசெய்யவேண்டும்" என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

அதன்பின் அவர்கள் இருவரும் காட்டின் வழியாகச் சென்றனர். சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரியகரடி அவர்களுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் ஒருவன் என்ன செய்தான் தெரியுமா? கொடுத்த வாக்குறுதியை மறந்தான்.செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் மறந்தான். கிடுகிடென்று ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான்.

இன்னொருவனுக்கு மரம் ஏறத் தெரியாது. தனி ஆளாகக் கரடியை சமாளிப்பதும் சாத்தியமில்லாத விடயம். என்ன செய்யலாம் என்று யோசித்தான். அப்படியே தரையில் படுத்துக்கொண்டான். மூச்சை அடக்கி இறந்தவன் போலக் கிடந்தான். அந்தக் கரடி பக்கத்தில் வந்து பார்த்தது. முகர்ந்து பார்த்தது. 'ஆள் இறந்துவிட்டான்' என்று நினைத்து அப்பால் சென்றுவிட்டது.

கரடி போனபின்பு மரத்திலிருந்தவன் மெதுவாக இறங்கி வந்து கீழே படுத்திருந்தவனைப் பார்த்தான். "அது சரி... உன்னிடம் அந்தக் கரடி காதின் ஓரமாக ஏதோ சொன்னதே! என்ன சொன்னது?" என்று கேட்டான். அதற்கு அவன் சொன்னான "ஆபத்திற்கு உதவாத உன்னை மாதிரி நண்பர்களை நம்பாதே" என்று கூறியது என்றான்.

இப்படி ஒரு கதை உண்டு. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நட்பு என்பது ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவேண்டும். அதுதான் நட்பு. ஆபத்து நேரத்தில் அம்பேல் ஆனால் அதற்குப் பெயர் நட்பு இல்லை. "அது எப்படி சார்... இரண்டு பேருக்குமே உயிர் ஆபத்து என்று வரும்போது தப்புவது எப்படி என்று தானே பார்க்க முடியும்" என்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் நியாயம் தான். இருந்தாலும் இரண்டுபேரும் சேர்ந்து ஒரு சங்கடத்தை சுலபமாக சமாளிக்கமுடியும் என்றால் அந்த நேரத்தில் கூட துணையாக இருப்பதைவிட்டு விட்டு தூர ஓடிப் போய்விட்டால் அது நன்றாக இருக்குமா? சிலர் மிகுந்த சாமர்த்தியமாக நடந்துகொண்டு கூட நண்பர்களைக் காப்பற்றுவது உண்டு.

அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள். இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஆளுக்கு ஒரு துப்பாக்கி வைத்திருந்தார்கள். அதை எடுத்துக் கொண்டு வேட்டை ஆடப் போனார்கள். ஏதாவது கண்ணில் படுகிறதா என்று அந்தக் காட்டில் தேடிக்கொண்டிருந்தனர்.

அந்தநேரம் பார்த்து காட்டிலாகா அதிகாரிகள் ஜீப்பில் அந்தப் பக்கமாக வந்துவிட்டனர். அவ்வளவுதான் அதைப் பார்த்ததும் இந்த இரண்டு பேரில் ஒருவன் வேகமாக ஓட ஆரம்பித்துவிட்டான். ஓடுபவனைப் பார்த்ததும் அந்த அதிகாரிகள் அவனைத் துரத்த ஆரம்பித்தார்கள். அவன் செடி கொடிகளுக்கு மத்தியில் வளைந்து வளைந்து ஓடினான். இவர்களும் விடவில்லை.

நீண்டதூரம் போய் ஒரு இடத்தில் அவனைப் பிடித்தார்கள். அதிகாரி கோபமாக அவனைப் பார்த்தார். "ஏன் இப்படி பயந்து கொண்டு ஓடி வந்தாய்...? அனுமதிப்பத்திரத்தை எடு" என்றார். அவன் மெதுவாக அனுமதிப்பத்திரத்தை எடுத்துக்காட்டினான். அதிகாரி அதை வாங்கிப் பார்த்தார். எல்லாம் சரியாக இருந்தது.

"உன்னிடம் தான் அனுமதிப்பத்திரம் உள்ளதே! அப்படி இருக்கும் போது ஏன் ஓடினாய்?" என்று கேட்டார். "என்னுடன் வந்த எனது நண்பனிடம் அது இல்லை" என்றான் இவன். "அவனிடம் இல்லாவிட்டால் உனக்கென்ன? நீ ஏன் ஓட வேண்டும்?" என்று கேட்டார். "அவனை உங்களிடமிருந்து தப்ப வைப்பதற்குத் தான் நான் இப்படி இவ்வளவு தூரம் ஓடி வந்தேன்" என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# எதிர்கால நடவடிக்கைகளுக்கு வியூகம்; பண்டாரநாயக்க குடும்பம் ஆலோசனை!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நிறுததுவது ஆகிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக பண்டாரநாயக்க குடும்பத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கிடையிலான முக்கிய சந்திப்பு கடந்த வார இறுதியில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரவு போசன விருந்துடன் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக ஜனாதிபதி மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி, அனுரா பண்டாரநாயக்க மற்றும் குடும்பத்தின் மூன்று சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அனுரா பண்டாரநாயக்கவிற்கு பொறுப்பு வாய்ந்த ஒரு பதவி வழங்கப்பட வேண்டும் என குடும்பத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்திப்பின்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் திருத்தங்களைச் செய்வது சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த காலத்தில் பிரான்சில் அரசியலமைப்பு புரட்சி ஏற்பட்டதாகவும் அதில் இருந்து எங்களுக்கு ஏற்ற முன்மாதிரிகளைப் பின்பற்றலாம் எனக் கூறியதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (க-4)

# இலங்கை ஜனாதிபதியின் கடிதத்திற்கு நோர்வே பிரதமர் பதில் அனுப்பவில்லை

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோாவே பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் குறித்து நோர்வே அரசாங்கம் புலிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஆயினும் ஜனாதிபதியின் கடிதத்திற்கு நோர்வே பிரதமர் இன்னும் பதில் கடிதம் அனுப்பவில்லையென கொழும்பில் உள்ள நோர்வே தூதரக பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

புலிகளிடம் இரண்டு விமானங்கள் உள்ளமை சந்தேகத்திற்கு இடமின்றி ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத இயக்கமொன்றிடம் விமானங்கள் இருப்பது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாகும். ஆகையினால் இது குறித்து நோர்வே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். அது தொடர்பாக கேட்ட போதே அந்த பேச்சாளர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கடிதத்தில் குறிப்பிட்ட விடயம் குறித்து நோர்வே அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அது குறித்து தீர்க்கமான முடிவு ஏற்பட்டதும் இலங்கை ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பதற்கு பொதுக் கட்டமைப்பு அமைப்பது குறித்து நோர்வே அரசாங்கம் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, பொதுக் கட்டமைப்பு அமைப்பது குறித்து அரசாங்கம் நோாவே ஊடாக புலிகளுக்கு அனுப்பியுள்ள யோசனை குறித்து புலிகள் சில விளக்கங்களைக் கேட்டுள்ளதாகவும் தகவல்கள் மூலம் தெரியவருகிறது. (க-7,4)

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணிப்பெண்களுக்கு 15000 ரூபா வேதனம் பெற்றுக் கொடுக்கப்படும்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்லும் இலங்கைப் பெண்களுக்கு ஆகக் குறைந்தது மாதாந்தம் 15ஆயிரம் ரூபா வேதனமாகக் கிடைக்க வேண்டும்.

அதற்குக் குறைவான வேதனம் கிடைக்குமாயின் பணிப்பெண்களாக இலங்கைப் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தடைசெய்யப்படும் என தொழில் அமைச்சர் அதாவுட செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

10ஆயிரம் ரூபா மாதாந்த வேதனத்திற்காக தற்போது எமது பெண்கள் வெளிநாடு செல்கின்றனர். 10 ஆயிரம் ரூபாவைப் பெற சுற்றுச்சுழல் உறவுகள், கணவர், குழந்தைகள், பெற்றோர் எல்லோரையும் விட்டு செல்ல வேண்டிய நிலை எமது பெண்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது ஆகக் குறைந்தது 15ஆயிரம் ரூபாவையேனும் இவர்களுக்கு மாதச் சம்பளமாக வழங்க வேண்டும்.

இதற்கமைய குறிப்பிட்ட பகுதியினருடன் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்த நடைமுறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்படும் என்று அமைச்சர் அதாவுட செனவிரட்ன தெரிவித் தார்.

இலங்கையில் தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பீடும் போது 10 ஆயிரம் ரூபாவை ஒரு பொருட்டாகக் கொள்ள முடியாதுள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (க-7)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் காரைநகர் கிராமிய வைத்தியசாலை

(காரைநகர்)

காரைநகர் கிராமிய வைத்தியசாலை அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி இயங்கி வருவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சாதாரண சலரோக பரிசோதனைக்குரிய மருந்துப் பொருட்களே தட்டுப்பாடாக உள்ளதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பரிசோதனைகள் நடாத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் பிரதேசம் மீளக்குடியமர்வுப் பிரதேசமாக இருக்கின்ற போதிலும்,தற்போது பன்னீராயிரம் பொது மக்களே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான மருத்துவ சேவையை வழங்கு வதற்கு ஒரேயொரு கிராமிய வைத்தியசாலையே காணப் படுகின்றது.

இவ்வாறு காணப்படுகின்ற வைத்தியசாலையில் மருத்துவர்களிற்கோ,தாதிமார்களிற்கோ தங்குவதற்கான விடுதி வசதிகள் ஏதும் அற்ற நிலையில் மருத்துவ உத்தியோகத்தர்கள் இரவு பகலாக சேவையாற்றுகின்றனர்.

அதுமட்டுமல்லாது மூன்று மருத்துவ உத்தியோகத்தர்கள், ஒரு பல் வைத்திய அதிகாரி, எழுதுவினைஞர், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர்,இதயத்துடிப்பு பதிவாளர் போன்ற உத்தியோகத்தர் எவருமே நியமிக்கப்படாதுள்ளதுடன் ஏனைய தாதிமார், சிற்றூழியர்களிற்கும் அதிகளவு வெற்றிடம் காணப்படுகின்ற நிலமையில் உள்ளது.

அத்துடன்,காரைநகரில் சனத்தொகைக்கு ஏற்ப போதுமான அளவு மருந்துகள் கையிருப்பிலிருப்பதில்லை. விற்றமின் குளிசைகள், விற்றமின் ஊசி மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளிற்கே தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்கூறப்பட்ட குறைபாடுகளை உடைய போதிலும் இரு உதவி வைத்திய அதிகாரிகள் மீள் நியமனம் பெற்று ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுகின்ற வேளையில் சலரோக கிளினிக், மருத்துவ கிளினிக், சிறுபிள்ளைகள் கிளினிக், கர்ப்பிணித் தாய்மார் கிளினிக், வெளிநோயாளர் பிரிவு, விடுதி நோயாளர் பிரிவுகள் உரியவாறு ஒழுங்காக நடைபெறுகின்றமை ஓரளவு திருப்திப்படுகின்ற வேளையில் மருந்துப் பொருட்கள் இன்மை பெரும் வேதனையாக உள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (க-246)

# கூட்டுறவு சங்கங்களுக்கு ஈரமானி விநியோகம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் உறுதிசெய்யப்பட்ட விலைக்கு நெல் கொள்வனவு செய்யும் வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தும் வகையில் 11 மில்லியன் ரூபா பெறுமதியான ஈரமானிக் கருவிகளை கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளனர். (க-9)

# அடையாள அணிவகுப்பு

(மன்னார்)

பாலியல் வல்லுறவு முறைப்பாட்டுச் சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு திரும்பிய அகதிகளில் ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (க)

# தையல் இயந்திரங்கள் வழங்க நடவழக்கை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் போரினால் பாதிக்கப்பட்ட 11 விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்க யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க-69)

# பேச்சுக்கு வருமாறு மன்னர் விடுத்த அழைப்பை
# ஏற்க மறுத்தன நேபாள அரசியல் கட்சிகள்

(காத்மண்டு)

பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்ற நேபாள மன்னரின் அழைப்பை அந்நாட்டு அரசியல் கட்சிகள் நிராகரித்துள்ளன.

அவசர நிலையை இரத்துச்செய்யும் வரை பேச்சுவார்த்தைக்கு இடமே இல்லை என்றும் கூறியுள்ளன. நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா அவசர நிலையைப் பிரகடனம் செய்துள்ளார். நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளின் தலைவர்கள் உட்பட 2 ஆயிரத்து 100 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 400பேர் மட்டுமே சமீபத்தில் விடுவிககப்பட்டனர்.

இந்நிலையில், மன்னர் ஞானேநதிரா அமைச்சரவை கவுன்சிலின் துணைத்தலைவர் துளசிகிரி கடந்த வியாழக்கிழமை அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அதில் நாட்டில் ஊடுருவல் மற்றும் லஞ்சத்தைத் தடுக்கவும், பொருளாதார சீர்திருத்தத்தை மேம்படுத்தவும் அரசியல் கட்சிகள் ஒததுழைப்புத் தரவேண்டும் இதறகுக் கட்சிகள் தயாராக இருந்தால் அவர்களுடன் மன்னர் ஞானேந்திரா பேச்சுவார்த்தை நடத்துவார் எனக கூறப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பை பல்வேறு கட்சிகளும் நிராகரித்துள்ளன.

இதுகுறித்து முக்கிய கட்சிகளில் ஒன்றான நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின நிலைக்குழு உறுப்பினர் கேஷவ் பாரல் கூறுகையில்,

நாட்டில் அவசர நிலையை இரததுச் செய்ய மீண்டும் ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்தவேண்டும். அதுவரை மன்னர் அழைப்புவிடுக்கும் பேச்சுவார்த்தைகளில கலந்து கொள்ளமாட்டோம். கட்சியின் நிலைக்குழுக் கூட்டத்தில் மன்னராட்சிக்கு எதிராகப போராட்டத்தை தீவிரப்படுத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது. இதற்காக 47 பேர் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது.

மன்னராட்சியை எதிர்த்து மிகபபெரிய அளவிலான போராட்டங்கள் நடத்தப்படும். இது குறித்து மற்றக் கட்சிகளுடன் கலந்து பேசி வருகிறோம். மாவோயிஸ்டுக்கள் ஆயுதங்களை கீழேபோடாத வரை அவர்களுடன் கைகோர்க்க மாட்டோம் என்றார் நேபாளி காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹோமத்தகால்.

மன்னர் ஞானேந்திரா நேரடியாகப் பேச்சுவார்தைகது அழைத்தால் மட்டுமே அதுகுறிதது்ப் பரிசீலிப்போம் என்றார். (ற)

## சுமாத்திராவில் நிலநடுக்கம்

(போர்ட்-பிளேர்)

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் கடந்த சனிக்கிழமை காலை பலமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டர் அளவுமானியில் 5 அலகாக அது பதிவானது. உயிர்சசேதம் மற்றும் பொருட்சேதம குறித்து இதுரை தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# ஆற்றில் விழுந்தது டிராக்டர்
# 50 பேர் ஸ்தலத்தில் பலி
## மத்திய பாகிஸ்தானில் சம்பவம்

(முல்தான்)

மத்திய பாகிஸ்தானில் முஸ்லிம்களின் வழிபாட்டுத் ஸ்தலத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிய டிராக்டர் ஆற்றில் விழுந்து 50 பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளதுடன், 4 பேரைக் காணவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய பாகிஸ்தானில் முல்தான் நகருக்கு வடமேற்கே சுமார் 200 கி.மீ தொலைவில் முஸ்லிம்களின் புனித ஸ்தலம் உள்ளது. இந்தப் புனித ஸ்தலத்திற்குச் சென்றுவிட்டு 54 பேர் டிராக்டரில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

வெள்ளிக்கிழமை இரவு மலைப்பாதையில் சென்றுகொண்டிருந்த டிராக்டர், சாலையிலிருந்து விலகி ஓடி ஆற்றில் விழுந்தது. இந்த விபத்தில் டிராக்டரில் பயணம் செய்த குழந்தைகள், பெண்கள் உட்பட 50 பேர் பலியாகியுள்ளனர். (ற)

# பிரபல இந்திய தமிழ் எழுத்தாளர்
# ஜெயகாந்தனுக்கு 'ஞானபீட விருது'

(புதுடில்லி)


பிரபல தமிழ் எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு 'ஞானபீட விருது' அறிவிக்கப்பட்டுளளது.

2002ஆம் அண்டுக்கான இந்த மதிப்புமிக்க விருது அவருக்கு வழங்கப்படவுள்ளது. ஞானபீட விருது பெறும் இரண்டாவது தமிழ் எழுத்தாளர் ஜெயகாந்தன் எனப் பாரதீய ஞானபீட அமைபபுத் தெரிவித்துள்ளது.

1934ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தில் மத்தியதரக் குடும்பமொன்றில பிறந்தவர் ஜெயகாந்தன. இதுவரை 40க்கும மேற்பட்ட நாவல்களையும், 200க்கும் மேற்பட்ட குறுங்கதைகளையும் ஜெயகாந்தன் எழுதியுள்ளார்.

ஒரு பாராட்டுப் பத்திரம், வாகதேவியின் வெண்கலச்சிலை, 5 இலட்சம் ரூபா ரொக்கம் ஆகியவை ஞானபீட விருது பெறும் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படுகிறது. ரோமைன் ரோலண்ட் எழுதிய மகாத்மாகாந்தயின் சுயசரிதையை ஜெயகாந்தன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

38ஆவது ஞானபீட விருது தேர்வுக் குழுக் கூட்டம் டெல்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. திபதி எல்.எம்.சிங்கி தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் ஜெயகாந்தன் இவ் விருதுக்காகத் தேர்வுசெய்யப்பட்டார். (ற)



# நீண்டதூர ஏவுகணையை சோதித்தது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

நீண்டதூரம் செல்லக்கூடியதும், அணு ஆயுதங்களை எடுத்துச்செலலக்கூடியதுமான ஏவுகணையைப் பாகிஸ்தான் கடந்த சனிக்கிழமை வெற்றிகரமாகச் சோதனைசெய்தது.

ஷாகீன்-2 என்ற இந்த ஏவுகணையை 2000 கிலோ மீற்றர் தொலைவு வரை ஏவ முடியும.

சோதனையின்போது இந்த ஏவுகணை தனது இலக்கை குறிபார்த்துத் தாக்கியதாகப் பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் தெரிவித்தார்.

ஆனால் எந்த இடத்தல் இந்தச சோதனை நடத்தபபட்டது எனபதை தெரிவிக்க அவர் மறுத்துள்ளார். தரையிலிருந்து தரையிலுளள இலக்கு நோக்கிச் செலுத்தக்கூடிய இந்த ஏவுகணைச் சோதனையை அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் நேரில் பார்வையிட்டார். பினனர் அவர் ஏவுகணை தயாரிப்பில் ஈடுபட்ட விஞ்ஞானிகளைப் பாராட்டினார்.

இந்த ஏவுகணை இந்தியா, மததிய கிழக்கு நாடுகள் போன்றவற்றில உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய திறன்படைத்தது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச சோதனை குறித்து இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு ஏற்கெனவே தகவல தெரிவிக்கபபட்டதாகவும் அரசுதரப்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



ஜி - 20 நாடுகளின் கூட்டமைப்பு புதுடில்லியில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்தக் கூட்டு வரைவு அறிக்கையில், வளர்ந்த நாடுகள் விவசாயத்துக்கு அளிக்கும் ஏற்றுமதி மானியம் உள்ளிட்ட சலுகைகளை நிறுத்துவது தொடர்பான காலவரையறை குறித்து வளர்ந்த நாடுகள் விரைவில் முடிவு எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கூட்டத்தில் பங்கேற்ற நாட்டு அமைச்சர்களுடன் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் கமல்நாத்.



சீன இளைஞர்கள் மேற்கத்திய ஸ்டைலுக்கு மாறிக்கொண்டிருக்கின்றனர். தங்கள் திருமணம் ஆடம்பரமாக நடப்பதை விரும்புகின்றனர். அதற்கு, இந்த ஜோடி ஒரு உதாரணம். மணப்பெண் அணிந்திருக்கும் உடையின் பின்புறம் வால் போல் 50 மீற்றர் தூரத்துக்குத் தொங்கும் துணியைப் பிடித்து வருகின்றனர் ஏராளமான மொடல் அழகிகள். அன்ஹூய் மாகாணத்தில் உள்ள ஹெப எனும் இடத்தில் இது இடம்பெற்றது.

# லெபனானில் குண்டுவெடிப்பு
## ஆறு பேர் படுகாயம்

(பெய்ரூட்)

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் ஆறுபேர் படுகாயமடைநதனர்.

லெபனானில் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முன்னாள் பிரதமர் ரபீக் அல் ஹரிரி குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். இநதக்குண்டு வெடிப்புக்கு சிரியா நாடே காரணம் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே தலைநகர் பெய்ரூட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள குடியிருப்பில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் குண்டு வெடித்தது. இதில் பல வீடுகளின் பல்கனிகளும், ஜன்னல்களும் சிதறியுள்ளன.

வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் குண்டு வெடித்துள்ளதால், ஏதே ஒரு வாகனத்தில் குண்டு வைக்கப்பட்டிருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றர்.

இந்தக் குண்டு வெடிப்பில் ஆறுபேர் படுகாயமடைந்தனர். குண்டு வெடிப்புக்கான காரணம இன்னும் தெரியவில்லை.

காயமடைநதவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ற)

# கொலம்பிய விண்கல விபத்தில் உயிருடன் தப்பிய நுண்புழுக்கள்
## பலவித ஆராய்ச்சிகள் தொடர்கின்றன

(ஹூஸ்டன்)

கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதில் உயிருடன் தப்பிய நுண்புழுக்களைக் கொணடு எதிர்காலத்தில விண்வெளி வீரர்களின பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசாவால அனுப்பபபட்ட கொலம்பியா விண்கலம் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 16இல் விண்ணில வெடித்துச் சிதறியது.

அதில் பயணம் செய்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 விண்வெளி வீரர்கள் இதன்போது உயிரிழந்தனர். ஆனால விண்கலத்தில் ஆராய்ச்சிக்காகக் கொண்டுசெல்லப்பட்ட நுண்புழுக்கள் பாதிக்கப்படவில்லை. அப்புழுக்கள வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டிகள் விபத்து ஏற்பட்டு 3 மாதங்கள் கழித்துக் கண்டெடுக்கப்பட்டன. அதில் இருந்த புழுக்கள் உயிருடன் இருப்பது தெரியவந்தது. அப்புழுக்கள் தப்பியதற்கான காரணங்களைக் கண்டறிந்து விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள ஈடுபட்டுவருகின்றனர்.

பூமியில் இருந்து 42 முதல் 32 கிலோ மீற்றர் தூரத்தில் விண்கலம் இருக்குமபோது புழுக்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டிகள் விண்கலத்தை விட்டு வெளியே வந்துவிட்டன. அப்போது ஏறபட்ட கடும் வெப்பநிலையையும், பூமியில் விழுந்தபோது ஏற்பட்ட அதிர்ச்சியையும் தாங்கி புழுக்கள் உயிருடன் உள்ளன. புழுக்கள் வைக்கப்படிருந்த சிறிய பெட்டிகள் பாதுகாப்பு உறைபோல் செயல்பட்டதால் புழுக்கள் உயிருடன் தப்பியதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

எனவே, விண்வெளி பாதுகாப்பு உறையை வீரர்களுக்கு அணிவிப்பதன் மூலம் அவர்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தொடர்ந்து அப்புழுக்கள் உயிர் தப்பியதை ஆராய்ந்து பாதுகாப்பு முறைகளை மேம்படுத்துவது குறித்தும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (ற)




### விடியல்

துள்ளும் இளமைதனில்
கனவனைத்தும் கலைந்தபின்பும்
தாயவளின் சேலைக்குள்
கிடைக்கின்ற சுகம் பெரிதோ?

துக்கங்கள் துயரங்கள்
தொடர்ந்தியாய் நீண்ட பின்பும்
விடியலெனும் ஒளிக்கீற்றை
தேடியா தவிக்கின்றீர்....?

பூமகிழன்

### சாதனை

கணவனை இழந்த நிலையிலும்
உன்னை வளர்த்தாளாக்கும் ~ தாயின்
பெருமையை பாருலகம் போற்றிட
சாதனைகள் பல புரிந்துவிடு மகளே...!

லோ.அபிராமி,
வல்வெட்டி.

### அநாதைகள்

உண்ண உணவின்றி
உறங்க இடமின்றி
உடல் சோர்வுற்று
உறக்க நிலையிலிருக்கும்
அநாதைப் பிள்ளைகளின்
பரிதவிப்பு நிலையை எண்ணிப்
பரிதாபம் அடைகின்றேன்
அவர்கள் வேதனை களைந்து
விடிவான வாழ்வுபெற
விழிதிறவப்பா இறைவா!

பா்.செல்வராணி,
வட்டுக்கோட்டை.

### வளரும் பிஞ்சு!

வளரும் பிஞ்சிது - நாளை
உலகை ஆளும் பெண் இது
கல்வியறிவில் சிறந்து
கடமைகளைச் செய்து
வாழ வழிகாட்டு த்தாயே!

ச.சிவரூபன்,
சுன்னாகம்.

## மௌனத்தின் தேடல்கள் ~51



### பிஞ்சு முகத்தின் தேடல்கள்...

என்ன உள்ளத்தில்
எதற்காய் ஏங்குகிறீர்...?
நிழல் தருவார் யார்?
அன்னையா ஆயாவா?
பிஞ்சு முகமே - உன்
தேடல்தான் என்ன?

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

### ஏக்கம்

யார் வரவை எதிர்நோக்குகிறது
பிஞ்சு விழிகள்...?
தோளிலே தூக்கிச் சீராட்டி
அன்புமழை பொழிந்த
தந்தையின் முகம் காணா
ஏக்கமிதோ...?
பல்லாயிரம் உயிர்களைச்
சூறையாடிய சுனாமியில்
சிக்குண்டு காணாமல்போன...
உறவின் வரவை
எதிர்நோக்குதோ
ஏங்கய விழிகள்...

சொ.நித்தியா,
கொக்குவில்.

### தேடல்

திரையின் மறைவினிலே
அன்னையின் அரவணைப்பிலே
யாரைத் தேடுகின்றாய் சிறுமியே!
தொலைந்து போனவர் பட்டியலில்
சேர்ந்த அப்பாவையா!

கஜசங்கவி,உடுவில்.

### பார்வையாளர்கள்

மகளிர்தின கோஷங்களும்
ஊர்வலங்களும
மேல்தட்டு வர்க்க மகளிருக்கே
கிராமிய உழைக்கும் மகளிர்
விடுதலைக் கனவுடன்
எட்டிப்பார்க்கும் பார்வையாளர்.

இ.நவகேதீஸ்வரன்,சுன்னாகம்.

## மௌனத்தின் தேடல்கள் - 53



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை மிகச் சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள.

கிடைக்கவேண்டிய இறுதித் திகதி - 28.03.2005

அனுபபவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 53
வலம்புரி - சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.


### முகிழ்ப்பு

யமுனை மீதிருந்து
அள்ளிவந்த எங்களூர்
'யமுனா' ஏரியினை
கவனிப்பாரில்லை

'மந்திரிமனை' அந்தோ
மிருகங்கள் உல்லாசம்
யாழில் புகழ்பூத்த
நல்லூரின் சிறப்பினை
நலம் குன்ற விடலாமோ?

யாழில் ஓடும்
வழுக்கியாறு
வற்றினாலும் பெருமைதான்

அளவையூரின்
பினாக்கை குளத்திலிருந்து
நவாலிக் கடல்வரை
யாழிசைத்துப் பாடும்
மாட்டு வண்டி
சடசடப்பல்
நெல்மணிகள்
சலசலப்பில்
பழுத்த சூரியன்
கிழக்கே எழும்
கண்கொள்ளா
எழில் காட்சி
முகிழ்ப்புடன் நீளும்!



ஜோ.ஜெஸ்ரின்

### தேசிய மூலம்

சமவயதுத் தவ்வல்களுடன்
ஒளிச்சுப் பிடிச்சு
விளையாடிய
புதர்ப் பத்தைகளும்
பாதுகாப்பு வலயமாம்...!

ஆய்ந்து கொறித்த
சூரை கருப்பை
ஈய்ஞ்சு விதைகளும்
நச்சுப்புகை மூட்டங்களால்
இந்நேரம்....
முளைதிறன் இழந்திருக்கும்!

இன்னும் பெயர் தெரியாத
பல உருவங்கள்
காணாமல் போயிருக்கும்...!

ஆனாலும்...
நம்பிக்கை துளிர்க்கிறது
கார்த்திகைச் செடியின்
வேர்க்கிழங்குகள் அங்கேயும்
முளைக்கத் துடிக்குமென்று!

ந.வினோதரன்,ஒட்டுவெளி.

### மலர்ந்திட்ட காதலால்

மனமது எங்கோ
தொலைந்து போக...
நினைவது தன்னை
மறந்து போக...
உணர்வுகள் எல்லாம்
கரைந்து போக...
உறக்கமெல்லாம்
கலைந்து போக...
துன்பங்கள் எல்லாம்
பறந்து போக...
கனவு எல்லாம் உன்னோடு
காலமெல்லாம் உனக்காக
உயிரையே உயிலாய்...
கொடுத்திடவும் தோன்றும்.



தெ.திலீப், சித்தன்கேணி.

### இனியும் புரிந்து கொள்ளாயா?



செப்படி வித்தை கற்றவனே
செத்துப் போனேனடா - உன்
வசியப் புன்னகையால்!
தினமும் விழியதில் காதல்
வழிகின்றது
இது உனக்கும் புரிகிறது
எனக்கும் புரிகிறது
நம் உதடுகள் மட்டும்
இதைச் சொல்லாமல் ஏனடா
உயிரிழந்து போகின்றது!

தூசி படியாத என்
தூய கனவுகளில் உலாவரும்
என் இனிய உறவே!
உன் மனதைத் தேக்கியே
என் கவிதைகள் கூட
ஊர்வலம் வருகின்றன

அன்பே! ஒருகணம்
சிந்தித்துப்பார்! என் காதலை
இனியாவது புரிந்துகொள்!

ஆ.சதீஸ், அரியாலை.

### காலத்தின் கோலம்

சங்ககாலம் என்றொன்று
இருந்திராவிட்டால்
பங்கமேதுமில்லாப பாதிப்
பிரச்சினை குறைந்திருக்கும்

ஏதெனில் - தமிழுலகில்
காதலும் போரும்
பிறப்பெடுத்துக்கொண்டது
அங்கேதான்.

ஜெ.சுபாஷினி

### குடிமகனே!

சிகரெட் பிடித்து
சீக்கிரம் போகாதே
சிறிதேனும் படி
சிகரத்தைப் பிடிக்கலாம்

கஞ்சா அடித்து
காதலியை மறக்காதே
காதலை நினை
கண்ணதாசன் ஆகலாம்

வடி அடித்து
வீணாய்ப் போகாதே
விரட்டி அடி
விடுதலை பெறலாம்



குட்டி அடித்து
குடிகாரன் ஆகாதே
குடியை அடி
குடியைக் காக்கலாம்

பாதி அடித்து
பாதியில் போகாதே
பாடம் படி
'பாா'ஜ ஆளலாம்.

T.M.ஜெகன், வராத்துப்பளை.

### துன்பம்

பாதம் சோலைகளை மட்டுமல்ல
முட்புதர்களையும் தாண்டுகிறது
நம்பிக்கை எனும் பாதம்
வலுவிழக்கும் போது தொடர்வதே
துன்பச் சங்கிலி.


R.தாரணி,
ஐயனார் கோவிலடி.

# நேரடியாக போரிட்டு வெல்லமுடியாதவர்கள் நிழல் யுத்தத்தை எம்மீது தொடுத்துள்ளனர்

## சு.ப.தமிழ்ச் செல்வன்

(ஜேர்மனி)

இலங்கையின் அரச படைத் தரப்பினா நேரடியாக எம்முடன் போரிட்டு வெல்ல முடியாதவர்கள். யுத்தநிறுத்தம் என்ற சர்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி அவர்கள் ஒரு நிழல் யுத்தத்தினை எம்மீது தொடுத்துள்ளனர் என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.



ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியலதுறை பொறுப்பாளர் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் ஜேர்மன் நாட்டுக்குச்சென்று அங்கு ஜேர்மனிய அரசின் வெளிவிவகார அமைச்சு, மற்றும் பொருளாதார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதன் பின்னர் சர்வதேச ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே சு.ப.தமிழ்ச் செல்வன் இதனைத் தெரிவித்தார். தற்போதைய யுத்த நிறுத்த சூழலில் அண்மைக்காலத்தில் எமது போராளிகள், பொறுப்பாளிகள் படுகொலை செய்யப்படுவது போன்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேரடியாக எங்களுடன் போரிட்டு வெல்ல முடியாதவர்கள், யுத்தநிறுத்தம் என்ற சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி ஒரு நிழல் யுத்தத்தினை எம்மீது தொடுத்துள்ளனர். அத்துடன், தமிழீழ விரோத ஆயுதக்குழுக்களை வைத்து எங்களைச் சீண்டுகின்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சூழ்நிலையிலும் பொறுமைகாத்து இந்த சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லவே நாம் தொடர்ந்தும் முயற் சிக்கின்றோம். ஆயினும் நாங்கள எப்போதும் பொறுமைகாக்க முடியாது என்ற எமது நிலைப்பாடுகளையும். நெருக்கடிகளையும சர்வதேச சமூகத்துக்கு எடுத்து விளக்கியுள்ளோம்.

கடந்த காலங்களில் சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைபபுலிகள் அமைப்புப் பற்றி பிழையான பிரசாரங்களே சர்வதேச சமூகத்துக்கு பரப்பபட்டது. அரசின் விடுதலைப் பட்சமான பிரசார நடவடிக்கைகளே சர்வதேச சமூகத்தைச் சென்றடைந்தது. அவசர மனிதாபிமானத தேவையின் அடிப்படையில் சர்வதேச உதவிகள் இலங்கையில் குவிந்துள்ள போதும அந்த உதவிகள் அவையும் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

குறிப்பாகத் தமிழர் தயாகப் பகுதிகள் புறககணிக்கப்பட்டே வருகின்றன. இந்த இயற்கை அனர்த்தம் நிகழ்ந்தும் இலங்கை அரசு பழைய நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருந்து வருகிறது. இதனை நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு தெளிவாக்கியுள்ளோம் என தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார். (7-4)

## கைக் குண்டு தாக்குதல்

(கொழும்பு)

பொறலஸகமுக விகாரை மீது நேற்று முன்தினம் அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிக்குமார் தங்கியிருந்த கட்டடத்தின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொறலஸகமுக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் பிக்கு ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 8 பேரிடம் வாக்குமூலம் பதிவு செயயப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-8)

## வழிகாட்டல் ஆலோசனைக்கென 100 ஆசிரியர்கள் தெரிவாகினர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாடு பூராகவும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைக்கென 100 ஆசியர்களைக் கல்வி அமைச்சின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவு தெரிவு செய்துள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தென்மாகாணங்களில் உளரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான உள, வள, பயிற்சி வழிகாட்டல் ஆலோசனைக்கென தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியாகள் ஈடுபடுத்தப் படவுள்ளதாக அமைச்சின் பிரதக்கல்விப்பணிப்பாளர் கே.ஏ.பிரேமசிறி தெரிவித்தார்.

வழமையான கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ள இவ்வாசிரியர்கள் தத்தமது கல்வி வலயங்களில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற ரீதியில ஈடுபடுத்தப்படுவார்கள்.

இவர்களுக்கான மேலதிக பயிற்சிகள் தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு பல்கலைக் கழகம் என்பவற்றில் வழங்கப்படும். இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு இந்தப்பயிற்சி வழிகாட்டல் ஆலோசனை அவசியம் என்று கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தகட்டமாக மேலும் 100 ஆசிரியர்களை தெரிவு செய்து பயிற்சி அளிக்கவுள்ளதாகவும் விசேடமாக இடைநிலைக்கல்வி பாடசாலைகளில் இத்திட்டம் தீவிரமாக அமுல் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## கிராம சேவையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில கிராம சேவையாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி மக்கள சேவையை முறையாகப் பெற்றுக்கொடுக்க பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுனாமி அனர்த்தப் பிரதேசங்களில் சேவையிலுள்ள கிராம சேவகர்கள் தற்போதைய சூழ்நிலையில் எவ்வாறு செயற்பட வேண்டும என்ற விசேட ஆலோசனைகளும வழங்கப்பட்டு வருவதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை, கிராம சேவகர்களின் போக்குவரத்துச் செலவுக்கான கொடுப்பனவை அதிகரிக்கவும் காரியாலயங்களுக்கான உபகரணங்களைக் கிரமமாகப் பெற்றுக்கொடுக்கவும் வழிவகை செய்யப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தொழிற் சங்கங்களுடன் அமைச்சில் பேச்சுவார்த்தையொன்றை நடத்தி எதிர்காலத திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அமைச்சர் தெரிவித்தா. சகல கிராம சேவகர் களுக்கும் மூன்று அல்லது நான்கு மாத காலத்திற்கு ஒருமுறை கருததரங்குகளை நடாத்தி அவர்கள் முகம் கொடுககும் பிரசசினைகள் தொடர்பாக ஆராய எணணியுள்ளதாகவும் அமைச்சா தெரிவித்தா. இச்சந்திப்பில் தொழிற சங்கத்தலைவர்களான டபிள்யூ. எச.எஸ்.பியதாச வன்னிநாயக்க மற்றும் அமைச்சின் செயலாளா தர்மசேன ஆகியோர் இதில் கலந்துகொணடுள்ளனர். (க-9)

## யாழ்.நாக விகாரையில் சர்வமதப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம)

சுனாமி பேரழிவினால் உயிரிழந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஆதமா சாந்தி வேண்டியும், மற்றும் முப்படையினர், பொலிஸ் ஆகியோர் உட்பட நாட்டின் பாதுகாப்பு கருதியும் எதிர்வரும் 26ஆம் திகதிவரை ஒரு வாரகாலம் யாழ்.நாக விகாரையில் சர்வமத பிரார்த்தனைகள் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த மூன்று மாத புண்ணியதான கிரிகைகளை கண்டியில இருந்து ஸ்ரீ நாகவிகாரைக்கு தரிசனம் செயதுள்ள இலங்கை ராமசஞ்ஞா மாநிக்காய பேராதெனிய ஸ்ரீசாரானந்த வித்தியானந்த தேரர் தலைமையில் நாவலப்பிட்டி ஸ்ரீகுனரத்ன பிரிவினையின் பல்லபான பஞ்ஞா சேகர நாயக்க தேரர் உட்பட 12 தேரர்கள் ஒன்று சேர்ந்து நடத்துவர்.

இந்த புண்ணிய கருமங்கள் யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் வழிக்காட்டலில் 51,52,53,55, சேனையகத்தன் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. "உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்காக தீப ஆராதனை" என்ற பெயரில் ஹோவாகொட ஸ்ரீசாராகநத விகாரையின் தேரா நுகாவெல ராகுல தேரர் இந்த சமய வழிபாடுகளின் முக்கியத்துவத்தை யாழ.மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கு தெளிவுபடுத்தி இந்த பூஜைகளை கடந்த 18ஆம திகதி மாலை ஆரம்பித்து வைத்தார்.

ஆராதனை பூஜைகளின் பிறகு பிரித், கதாபிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த கதாபிரசங்கத்தில் யாழ்.மாவட்ட இராணுவ தளபதி மற்றும் 51 சேனையகத்தின் சேனாதிபதி, படையணி கட்டளையிடும் அதிகாரிகள் உட்பட அதிகாரிகள், சிப்பாய்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த புண்ணிய கரும பூஜைகளை நடததுவதற்கு யாழ்.நாக விகாரையின் தேரர் வராபிட்டியே கோளித்த தேரர் ஒருங்கிணைப்பு நடவடிக்கை செய்து கொடுத்துள்ளார். மிக முக்கியமான கதாபிசங்கம் மறறும் தரும போதனைகள் சர்வத ராத்திரி கதாபிரசங்கம் உட்பட மூன்று மாத புண்ணிய கரும பிராத்தனைகள் என்பனவும் இடமபெறும் மேலும் யாழ்.குடாநாட்டில வசிக்கும் மக்களுக்கு பிரித் நூல் வழங்குதல் மறறும் பிரித் மணல் விசுறுதல் போன்ற சமய நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன. (ற)

## நிதி, நிவாரணங்கள் வழங்கியிருப்பின் அவற்றின் விபரங்களை அறிவியுங்கள்!

### ம.உ.க.கா.குழு, தூதரகங்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

சுனாமி அனர்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கென நிதியுதவிகளையும் இதர சேவைகளையும் வழங்கியிருப்பின் அவற்றின் விபரங்களையும் புள்ளி விபரங்களையும் தமககு அறிவிக்குமாறு கொழுமபிலுள்ள மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு சகல வெளிநாட்டு தூதரகங்களுக்கும் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

டோககியோவை தளமாகக் கொண்ட ஒரு அமைப்புக்குத் தெரிவித்த கருத்துக்களின்படி "ஜனாதிபதி ஒரு சதத்தையேனும் இன்னமும் பெற்றிருக்கவில்லை" ஜனாதிபதி பிரதமர் நிதிகளே தற்போது புனரமைப்பிற்கு பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் இந்நாட்டின் பாதிககப்பட்ட மக்கள் நலனில் நாம் அக்கறை கொண்டுள்ளோம். இந்தச் செய்தியை வாசித்து நாம் அதிர்ச்சியடைந்துள்ளோம். சாவதேச சக்தியை சமமாகவும் நீதியாகவும பகிர்ந்தளிப்பதற்குரிய ஒரு சர்வதேச அமைபபு என்ற வகையில் ஜனாதிபதியின் குறிப்பிட்ட இக் கூற்றினை கருத்தில் கொள்ளும்போது வாக்குறுதிகளை பல நாடுகள் வழங்கிவிட்டு நியாயமற்ற ரீதியில் நடந்து கொண்டுளளன என்பதை அறிய முடிகிறது.

எனவே பொதுமக்களுக்கு,

* உடனடி நிவாரணமாக என்ன உதவிகள் வழங்கப்பட்டன? பணம்/பொருள்/சேவை.
* அவை பணம் எனில் எவ்வாறு/எப்போது?
* ஜனாதிபதி நிதியத்திற்கு மேற்படி நிதியை வழங்கினீர்களா? எவ்வளவு?
* வேறிடங்களுக்கு வேறு பங்களிப்புகள் செய்துள்ளீர்களா? அவ்வாறெனில் யாருக்கு?
* உங்கள் உறுதிமொழி என்ன? இவற்றை எப்பொழுது வழங்க உத்தேசித்துள்ளீர்கள்?

என்ற விடயங்கள் குறித்து தமக்குத தெளிவாக அறிவிக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்புக்குழு சகல வெளிநாட்டு தூதரகங்களையும் கேட்டுள்ளது. (க-6,4)

## புதிய சாவடி அமைப்பிற்கு மக்கள் நன்றி தெரிவிப்பு

### பாதுகாப்புப் படையினர் தகவல்

முகமாலை சோதனைச்சாவடிப் பகுதியில் பல புதிய சோதனைச்சாவடிகளை அமைக்கும் பணிகள் யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய 55ஆவது சேனையக தளபதியினால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் உதவிகளுடன் ஆரமபிக்கப்பட்டு தற்போது அந்த பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இதில் மலசல கூடங்கள் மற்றும் பொருட்களை பரிசோதனை செய்யுமிடங்கள் என்பன புதிதாக நிர்மானிக்கப்படுகின்றன.

இந்த நிர்மான பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது குறித்து 55 சேனையக தளபதி மேஜர் ஜெனரல வீ.ஆர்.சில்வா கடந்த 18ஆம் திகதி நேரில் சென்று அவதானித்ததுடன், அன்றைய தினம் சோதனை நிலையம் ஊடாக பயணம் செய்த மக்களின் ஆலோசனைகளையும் அறிந்துக்கொண்டார்.

இராணுவத்தினரின் இது போன்ற திட்டங்கள் குறித்து மக்கள் நன்றி தெரிவித்தனர்.

## ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மலையகப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் மற்றும் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் காணப்படும் முரண்பாடுகள் உட்பட மலையக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடாபாக இலங்கைத் தொழிலாளர்கள் காங்கிரஸ் இன்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் தோட்ட உட்கடடமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சருமான முத்து சிவலிங்கம தலைமையிலான பிரதிநிதிகள் ஜனாதிபதியைச் சந்தித்து இப் பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளனர். (க-7,4)

# தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீரழிக்கின்றன.

## விவாத அரங்கு -7

**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்ற விவாத அரங்கிற்கு, சீரழிக்கின்றன எனத் தமது வாதங்களை முன்வைக்கின்றனர் தனங்கிளப்பு வ.சின்னப்பா மற்றும் அரியாலை திருமதி ர.இரகுநாதன் ஆகியோர்.**

''கல்வியின் நோக்கம் என்ன? என்று கேட்டால், பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுப் பல் கலைக்கழகத்திற்கு செல்வது தான் என்று சொல்லிவிட முடியாது. மனிதன் மனிதனாக வாழவேண்டும், மனிதநேயம் மிக்க சமுதாயம் உருவாககப்படவேண்டும். மனிதம் மேலோங்க வேண்டும். இதனால், "சமுதாயத்திற்குப் பொருத்தப்பாடுடைய நல்ல பிரஜையை உருவாக்குவது தான் கல்வியின் நோக்கம்'' என்று ஆன்றோர்கள் சொன்னார்கள்.

அன்று பாடசாலைகள் அடக்கம், பொறுமை, கீழ்ப்படிவு, பெரியோரைக் கனம் பண்ணுதல், ஆசிரியரை மதித்தல் போன்ற நல்ல பண்புகள் வளரும் இடங்களாகத் திகழ்ந்தன. எழுத்தறிவித்தவன் இறைவன் என்றார்கள். அதாவது ஆசிரியனைத் தெய்வமாக மதித்தார்கள.. 'மாதா, பிதா, குரு தெய்வம்' என்ற வாக்கியம் இக்கருததை மேலும் வலியுறுத்தும். இதன் காரணமாக பாடசாலைகள் கல்வியறிவோடு மனிதநேயப் பண்புகளையும் சமுதாய விழுமியங்களையும் வளர்க்கும் நிலையங்களாகத் தொழிற்பட்டன.

தனியார் கல்வி நிலையத்தில் கல்வியறிவு ஒன்றே பிரதான நோக்கமாகக் கொள்ளப்படுகின்றது. தனியார் கல்வி நிறுவனங்களால், ஆசிரியர் கூலிப்பணியாளராக - கூலிக்காரராகவே மதிக கப்படுகிறார். கூலிக்கு வேலை செய்ய வந்திருக்கின்றேன் என்ற எண்ணம் ஆசிரியர் மனதில் வியாபித்து இருப்பதால், அவரால் மாணவரிடமிருந்து எந்தவித மதிப்பையோ மரியாதையையோ எதிர்ப்

வ.சின்னப்பா
தனங்கிளப்பு

பார்க்க முடிவதில்லை.

மாணவர் கொடுக்கும் கூலி, ஆசிரியருக்கு நேரடியாகவே வழங்கப்படுவதால், ஆசிரியரைக் கனம் பண்ண வேண்டிய தேவை மாணவருக்கும் இல்லை. தனக்குக் கொடுக்கப்படும் வேதனத்தையே குறிக்கோளாகக் கொண்டு ஆசிரியர் தொழிற்படுவதால் எதையும் தாங்கும் இதயம் கொண்டவராக ஒழுக வேண்டிய தேவையும் அவருக்கு உண்டு. இதனால் தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரியனை ஒரு தோழன் ஆகவே மாணவர்கள் கருதுகிறார்கள். அவருடன் எதையும் பேசலாம், சிரித்து மகிழலாம், சீண்டியும் பார்க்கலாம் என்ற நிலை மாணவரிடையே காணப்படுகின்றது.

இவ்வாசிரியரே பாடசாலையிலும் தோன்றுவதால் 'பழக்கம்' இடம்மாறி பாடசாலையிலும் ஆசிரியர் மதிக்கப்படுவதில்லை. மாறாக ஆசிரியர் அவமதிக்கப்படுகின்றார். இத்தகைய சீரழிவிற்குத் தோற்றுவாய் தனியார் கல்வி நிறுவனங்களே. ஆதலால் தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியைச் சீரழிக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று பண்புகளையும் ஒருங்கே வளர்த்தெடுப்பது தான் கல்வி என்று சொல்லுவார்கள். வெறுமனே அறிவை மாத்திரம் வளர்த்துக் கொள்ளும் நோக்கில் பெறும் கல்வியால், எந்தவிதப் பயனும் இல்லை. ஒரு துவிச்சக்கர வண்டியை எப்படி ஓட்டுவது என்றால் - அதன் மேலே ஏறி உட் கார்ந்து கொண்டு, கைகளால் கை பிடிகளைப் பிடித்துக் கொண்டு கால்களால் மிதித்தால் வண்டி ஓடும் என்று அறிந்து கொள்வது தான் அறிவு

இந்த அறிவை வைத்துக் கொண்டு, துவிச்சக்கர வண்டியை ஓட்ட முடியாது. இது எல்லோரும் அறிந்த உண்மை. இந்த அறிவோடு, அனுபவவாயிலாக, வார்த்தைகளில் விபரிக்க முடியாத பல திறன்களையும் பெற்ற பின்பு தான் நாம் அவ்வண்டியை ஓட்டலாம் என்பது யாவரும் அறிந்ததே. எனவே திறன்களும சேர்ந்த பின்பு தான் அறிவு பயனுள்ளதாகின்றது. அடுத்தது மனப்பாங்கு ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல் நல்ல மனப்பாங்கு. சாதி, மத, நிற வேறுபாடுகளைக் கடந்து ஒழுகுதல் சிறந்த மனப்பாங்கு ஆகும்.

நல்ல மனப்பாங்கு வளர்ச்சி இல்லாதவர்கள் தான் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். மனிதனை மனிதன் சுட்டு விழுத்தும் இன்றைய துப்பாக்கிக் கலாசாரத்திற்கு, நல்ல மனப்பாங்கு வளர்ச்சி இன்மையே அடிப்படை என்பது வெளிப்படை. அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று பண்புகளையும் வளர்க்க உதவும் நிலையமே பாடசாலை. அங்கு போதிக்கப்படுவதே கல்வி. ஆனால் தனியார் கல்வி நிறுவனங்கள் அறிவை மாத்திரமே வளர்க்கும் விதத்தில் தொழிற்படுகின்றன. இதனால் தனியார் கல்வி நிறுவனங்களில் சான்றோரால் எதிர்பார்க்கப்படும் 'கல்வி'யைப் பெறமுடியாது. ஆதலால் தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியைச் சீரழிக்கின்றன என்று சொல்வதில் தவறில்லை.

பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தான், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பணிபுரிகின்றார்கள். ஆதலால் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை எந்தவகையிலும் வேறுபடுத்திப்பார்க்க முடியாது.

ஆனால் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் ஆர்வத்துடன் தொழிற்படுகின்றார்கள் என்பதை மறுக்கவும் முடியாது. ஆர்வத்துடன் தொழிற்பட வேண்டிய தேவையும் அவர்களுக்கு உண்டு. ஏனெனில் அவர்கள் ஆர்வத்துடன் தொழிற்படாவிட்டால் பணி நீக்கம் செய்யப்படுவதற்கான வாய்ப்பும் அவர்களுக்கு உண்டு.

அத்துடன், தனியார் கல்வி நிறுவனங்களில் அவர்கள் ஆர்வத்துடன் தொழிற்படுவதைக் கருத்திற்கொண்டு பார்க்கும் பொழுது, அவர்கள் பாடசாலைகளில் சற்றுத் தளர்வுடன் தான் தொழிற்படுகின்றார்கள் என்பதை மறைக்கவும் முடியாது. இதை இன்னொரு வகையில் நோக்கினால் தனியார் கல்வி நிறுவனங்கள் என்ற அமைப்புக்கள் இல்லாவிட்டால், ஆசிரியர்களின் பணியார்வம் பாடசாலைகளில் மேலோங்கி நிற்கும் என்பது கண்கூடு.

எனவே, பாடசாலைகளில் ஆசிரியர்களின் பணியின் பின்னடைவிற்கு தனியார் கல்வி நிறுவனகள் ஒரு வகையில் துணை போகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

கல்வி மேம்பாட்டிற்குத் தனியார் கல்வி நிறுவனங்கள் தாம் உதவுகின்றன என்று கூற முடியாது. ஏனெனில் தனியார் கல்வி நிறுவனங்கள் என்ற அமைப்புக்கள் தலைதூக்க முன்பு தொடக்கம் அண்மைக்காலம் வரை வாழ்ந்த பல பெரியார்கள், பாடசாலைக் கல்வியினூடு மாத்திரமே மேலோங்கி அதி உயர் பதவிகளை வகித்தார்கள், வகித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமன்று தனியார் கல்வி நிறுவனங்களின் வாசனையே அறியாத எமது சமகாலத்தவர்கள் கூட பாடசாலைக் கல்வியுடன் மாத்திரமே தரமுயர்ந்து பல அறிஞர்களாகவும் கல்விமான்களாகவும் அதிஉயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் திகழ்வதையும் நாம் பார்க்கின்றோம்.

தனியார் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் சில முதிர்ந்த ஆசிரியர்கள் கூட, தமது கற்றற் காலங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகவே தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியைச் சீர்ப்படுத்துகின்றன என்று சொல்ல முடியுமா?

எல்லா மாணவர்களாலும் தனியார் கல்வி நிலையங்களில் இணைந்துகொள்ள முடியாத நிலை உள்ளது. தூரமாக உள்ள பின்தங்கிய கிராமங்களில் உள்ள மாணவர்களால், பட்டினப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு உரியநேரததுக்கு வநது போக வாய்ப்பில்லை, சொந்த வாகன வசதியோ பொதுப் போக்குவரத்து வசதிகளோ இலலாத பல விவேகமான மாணவர்கள் கிராமப்புறங்களில் இருக்கிறார்கள்.

அத்துடன், தனியார் கல்வி நிறுவனங்கள் அறவிடும் தொகையை ஈடுசெய்ய முடியாத வறிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களும் இருக்கிறார்கள். இவர்கள எல்லோரும் படித்து முன்னேறத் தக்க இலவசக் கல்வி வாய்ப்பு தற்போது உள்ளது. இந்நிலையில் வசதிகள், வாய்ப்புக்கள் உள்ள பிரதேசத்து, வசதி படைத்த மாணவர் மாத்திரம் கற்று, போட்டி நிலையை உருவாக்க இந் நிறுவனங்கள் துணைபோகின்றன. நிதி கறக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் கிராமப் புறத்து விவேகமுள்ள மாணவர்களுக்கு ஒருவகையில் துரோகம் செய்கின்றன என்று சொல்வதும் பிழையாகாது.

வறுமையில வாடும் ஏழை மாணவன் ஒருவனின் மன நிலையைப் புரிந்துகொள்ளும் மனநிலை உள்ளவர்களால் தான் இக் கருத்தை ஏற்க முடியும். 23.11. 2004 வலம்புரியில் வெளியான 'குடும்ப வறுமை நிலையால் ஏற்பட்டுள்ள பரிதாப நிலை யாழ். மாவட்டத்தில் 5000 மாணவர்கள் தம் பாடசாலைக் கல்விக்கு முழுக்கிட்டனர்' என்ற செய்தியும் இக் கருத்துக்கு வலுவூட்டுவதாக உள்ளது.

அச் செய்தியில், வறுமையால் மாணவர் கல்வியில இருந்து இடைவிலகி வருவதைக் குறிப்பிட்டு, 'இவ்விதமான இடை விலகலில் நகர்ப்புற மாணவர்களை விட, கிராமப்புற மாணவர்களே கூடுதலாக உள்ளதாகவும் தெரிய வருகின்றது'' என்று சொல்லப்பட்டிருப்பது, முன்சொன்ன கிராமப்புற மாணவரின் அவல நிலையை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது. இலவசக் கல்வியையே தொடரமுடியாது வாடும் வறிய மாணவர்களால் பணம் கொடுத்துப் படிக்க முடியுமா? ஆகவே எவ்வகையில் நோக்கினாலும் தனியார் கல்வி நிறுவன்ங கள் மாணவரின் கல்வியைச சீரழிக்கின்றன என்பது தப்பாகாது.

இன்றைய கால கட்டத்தில் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்க் பல்கலைக் கழகத்தற்குத் தெரிவாகின்றனர் என்ற கருத்துப் பரவலாகப் பேசப்படுகின்றதெனினும், தனியார் கல்வி நிறுவனங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் பல்கலைக் கழகங்கள் எல்லாம் மூடப்பட்டுக் கிடந்தனவா? இல்லையே! அன்றி தனியார் கல்வி நிறுவனங்களில் பயின்ற அத்தனை மாணவர்களும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகின்றனரா? அதுவும் இல்லையே! ஆகவே மாணவரின் விடாமுயற்சியும் ஊக்கமும் விவேகமும் தான் கல்வி மேம்பாட்டுக்குக் காரணம் என்பது கண்கூடு.

கல்வி நிலையங்களான பாடசாலைகளில், சீருடை ஒரு சிறந்த குறிக்கோளின் அடிப்படையிலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவரிடையே உயர்வு தாழ்வின்றி எல்லோரையும் ஒன்றாகப் பார்க்கும் விதத்திலேயே பாடசாலைச் சீருடை முக்கியத்துவம் பெறுகின்றது. ஏழை மாணவரிடையே தாழ்வுச் சிக்கல் தோன்றாதிருக்கச் சீருடை உதவுகின்றது. தனியார் கல்வி நிறுவனங்களில் சீருடைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. வசதிபடைத்த குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் போது விதவிதமான நவநாகரிக உடை அணிந்து செல்வதைப் பார்க்கின்றோம்.

அதேவேளை, ஏழை மாணவர் ஓரிரு உடைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு கஷ்டப்படுவதையும் பார்க்கின்றோம். வசதியீனம் கருதி சிலவேளைகளில் பாடசாலைச் சீருடையுடன் அங்கு செல்லும்மாணவர்கள் கிண்டல் செய்யப்படுவதையும் பார்க்கின்றோம். இதனாலும் மாணவரிடையே தாழ்வுச் சிக்கல் ஏற்படுகின்றது. இந்த வகையில் நோக்கினாலும் மாணவரின் கல்வி சீரழிய, சீருடைக்கு முக்கியத்தும் கொடாத தனியார் கலவி நிறுவனங்கள் காரணமாகின்றன என்று சொல்லலாம்.

'ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் வள்ளுவப் பெருந்தகை, ஆதலால் மனிதனுக்கு ஒழுக்கம் அவசியம் என்பது வெளிப்படை. கல்வியும் ஒழுக்கமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. கல்வி இல்லாத ஒழுக்கம் உயர்வடைந்தாலும், ஒழுக்கம் இல்லாத கல்வி உயர்வடையாது. ஒழுக்கம் பாடசாலைகளில் தான் பேணப்படுகின்றது. தனியார் கல்வி நிறுவனங்கள் ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒருவகையில், ஒழுக்கக் கேடான செயற்பாடுகளுக்குத் தனியார் கல்வி நிறுவனங்கள் துணைபோகின்றன என்றும் சொல்லலாம். பல மாணவ, மாணவியர் "ரியூசனுக்குப்" போவதாகக் கூறிக்கொண்டு தவறின இடங்களுக்குச் சென்று தகாத முறையில் ஒழுகுவதாகவும் பத்திரிகைகள் மூலம் அறிகின்றோம்.

முன்சொன்ன பாடசாலைச் சீருடை ஒழுக்கம் பேணவும் உதவுகின்றது. மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் செல்லும் போது, அவர்கள் பாடசாலைக்குத் தான் செல்கின்றார்கள் என்று சொல்லலாம். தவறின இடங்களுக்குச் செல்ல அவர்களுக்குப் பாடசாலைச் சீருடை வாய்ப்பளிக்காது. ஆனால் வண்ண உடுப்புடன் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்பவர்கள், தவறின இடங்களுக்குச் செல்ல வாய்ப்பாக அமைகின்றது.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்கினால் தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியைச சீரழிக்கின்றன என்பதே வாதமாகும். □

## வாதம் -3

''காலை எழுந்தவுடன் படிப்பு, மாலை முழுவதும் விளையாட்டு என வழக்கப்படுத்திக் கொள்'' என்றார் பாரதியார். ஆனால் இன்று நாள் முழுவதும் படிப்பு என வழக்கப்படுத்திவிட்டது இத் தனியார் கல்வி நிறுவனங்கள். ஆரம்ப வகுப்பு தொடக்கம் அனைத்து மாணவர்களும் பாடசாலையால் வந்தவுடன் அரக்க, பரக்க இரண்டு பிடியை வாயில் அள்ளிப்போட்டு விட்டு புத்தகக் கட்டை சுமந்து கொண்டு திரும்பவும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு படிக்க ஓடுகிறார்கள். இது தற்போதைய நாகரிகமாகிவிட்டது.

கல்வி என்பது தனியே புத்தகப் படிப்பு மட்டுமல்ல, விளையாட்டு, கலை, ஒழுக்கம் எனப் பல அடங்கும். பாடசாலைகளில் மாணவர்கள் இவை அனைத்தும் கற்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டு அதற்குரிய ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாணவருக்கு திறமை தனியே பாடங்களில்

திருமதி ர.இரகுநாதன்
அரியாலை

மட்டும் இருக்காது. விளையாட்டிலும், கதை எழுதுவதிலும், கவிதை புனைவதிலும், நாடகம் நடிப்பதிலும் ஓவியம் வரைவதிலும் எனப் பல்வேறுபட்டிருக்கும்.

அவற்றை இனம் கண்டு அவ்வாற்றலை மேம்படுத்த ஆசிரியர்கள் பாடசாலை தவிர்ந்த நேரங்களைப் பயன்படுத்த முயற்சி எடுத்தாலும் மாணவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் இந்தத் தனியார் கல்வி நிறுவனங்களே. இதனால் இவர்களது சுய ஆற்றல் திறமை மங்கிப் போகின்றது. ஒரு மாணவன் நாள் முழுவதும் பாடங்களை கிரகிக்க முடியும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். எனவே இவர்கள் தனியார் கல்வி நிலையத்தில் பாடங்களை முழுமையாக கிரகிக்கிறார்களா என்பது கேள்விக்குறியே. மேலும் இத் தனியார் கல்வி நிறுவனங்கள் புனிதமான ஆசிரியத் தொழிலை வியாபாரம் ஆக்குவதற்கு வழி கோலுகின்றது.

இவர்கள் பாடசாலையில் நன்றாக கற்பிக்காமல் தங்கள் திறமையை தனியார் கல்வி நிறுவனங்களிலும் காட்டுகிறார்கள். ஆசிரிய சமூகம் மன்னிக்கவும். ஆசிரியர்கள் எல்லோரையும் குற்றம் சாட்டவில்லை. இதனால் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் வசதியில்லாத மாணவர்கள் நிலை மிகப் பரிதாபமானது. அதுமட்டுமல்ல பாடசாலையின் கல்வித் தரமும் குறைகிறது.

அடுத்ததாக இந் நிறுவனங்கள் மணவர்களின் ஒழுக்க சீர்கேட்டுக்கும் ஒரு காரணமாக அமைகிறது. பாடசாலையில் மாணவர்கள் ஒழுங்காக வகுப்பிற்கு சமுகமளிக்காவிடில் அதற்குரிய காரணம் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் ஆசிரியர்க்கு அறிவிக்கப்படல் வேண்டும். ஆனால் தனியார்கல்வி நிறுவனங்களில் நடவடிக்கைகள் இறுக்கமாக இருப்பதில்லை. இதனால் மாணவர்கள் வகுப்பிற்கு செல்லாமல் வேறு தவறுகளைச் செய்தால் அவற்றை உடனடியாகத் தெரிந்துகொள்ள முடிவதிலலை. இது தவறுகளை முளையில் கிள்ளிவிட முடியாத நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

எனவே, இன்றைய மாணவர்களே நாளைய சமுதாயம் என்ற கூற்றை சரிவர நிறைவேற்றுவதற்கு இக் கல்வி நிறுவனங்கள் தடைக்கல்லாக அமைவது மட்டுமல்லாமல் மாணவர்களின் கல்வியை சீரழிக்க தனியார் கல்வி நிறுவனங்கள் துணைபோகின்றன என்பதே எனது தீர்மானமான வாதமாகும்.□



# சிறுவர் அரங்கம்

## தம்பி!



அன்பைச் சுரப்பாய் தம்பி - அது
இன்பம் சுரக்கும் தம்பி!
துன்பம் ஏற்பாய் தம்பி - உடன்
துணிவைக் கற்பாய் தம்பி!

ஆசைப் படுவாய் தம்பி - அதன்
அளவை இடுவாய் தம்பி!
மாசைச் சுடுவாய் தம்பி - மண்ணில்
மதிக்கப் படுவாய் தம்பி!

வசையை ஒழிப்பாய் தம்பி - வீண்
வாதம் அழிப்பாய் தம்பி!

இசையில் களிப்பாய் தம்பி - இனிமை
அலையில் சுழிப்பாய் தம்பி!

## உங்களுக்குத் தெரியுமா?

*ஒரு மின்னலின் நீளம் 6 கிலோ மீற்றர்.

*தாரிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து அஸ்பிரின்.

*உலகின் மிகப் பெரிய மலர் ரப்லீசியா.

*உலகின் உயரமான மரம் தி ஜயண்ட் ரெட்வுட் மரம்.

*முதலைகளின் ஆயுட்காலம் 300 ஆண்டுகள.

*மிகச் சிறிய மழைத்துளியின் விட்டம் 1.03 மில்லிமீற்றர்.

*சந்திரனுக்கும், பூமிக்கும் இடையில் உள்ள தூரம் 2,51,720 மைல்கள்.

*மிகவும் வெப்பமான கிரகம் வீனஸ்.

*பிட்யூட்டரி சுரப்பிகள் மூளையின் அடிப்பகுதியில் சுரக்கின்றது.

*சூரிய மண்டலம் கோபர் நிக்கஸ் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.

சொ.நித்தியா, பெரியபுலம் மகாவித்தியாலயம்.

## புதிர்


எட்டு ஆறு எண்களைப் பயன்படுத்தி 750 விடை வரச் செய்யவேண்டும். இதில் கூட்டல் மட்டும் உபயோகிக்கலாம்? முயன்று பாருங்கள்.

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்!



அன்புக் குழந்தைகளே!


வீதம் வீதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசை தானே! இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.



## இவை உங்களின் ஓவியங்கள்



ச.நிசாந்தன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



S.நிசானுகா
யா/இந்து ஆரம்ப பாடசாலை.





சி.கேடில்ஸ்
யா/புனித மரியாள் வித்தியாலயம்.

## கேரம் விளையாட்டில் 'செஞ்சுரி'

கிரிக்கெட் விளையாட்டில் 'செஞ்சுரி' என்றால் 100 ஓட்டங்கள் என்று அனைவருக்கும் தெரியும்.

கேரம் விளையாட்டில் செஞ்சுரி என்றால் பலருக்குத் தெரியாது. ராணிக் காயுடன் (சிவப்புக்காய்) 9வெள்ளைக் காய்களோ, 9 கறுப்புக் காய்களையோ விடாது தொடர்ந்து பொக்கெட் செய்வதற்குத்தான் செஞ்சுரி என்று பெயர்.

## வீதி விளக்கு

கல்லேரி என்னும் கிராமத்தில் முருகன் என்றொரு மாணவன் இருந்தான்.

அவனுக்குப் பத்து வயது இருக்கும். அவன் மிகவும் துடுக்கானவன். பெற்றோர்களின பேச்சை ஒருநாளும் கேடக மாட்டான்.

அந்தக் கிராமத்தில புதிதாக அப்பொழுதுதான் மின்சார விளக்கு அமைத்தார்கள். மின்விளக்கு ஏற்றுவிழா அவ்வூராட்சி மன்றத் தலைவரால சீரும் சிறப்புமாக நடத்தப்பட்டது. மின்சாரத்தின் அருமை பெருமைகளை எல்லாம் பலா பலவிதமாக அவ்விழாவில் சிறப்பாகப் பேசினார்கள்.


முருகனின் வீடு ஊர்க் கோடியில் இருந்தது. அவன மாமா வீடு பக்கத்துத் தெருவில் இருந்தது. முருகன் அடிக்கடி மாமா வீட்டிற்கு விளையாடச் செல்வது வழக்கம்.

ஒருநாள் விளையாடிக் கொண்ருக்கும்போது முருகன ஒரு கல்லை எடுத்து மின் வளக்கை நோக்கி வீசினான். பல்பு உடைந்துவிட்டது. நல்ல காலம் அதை யாரும் பார்க்வில்லை. பார்த்திருந்தால் அவன் உடம்பை நன்றாய்ப் பதம் பாாத்திருப்பார்கள்.

சூரியன் மேற்குத் திசையில் மறைந்துவிட்டான். அன்று அமாவாசை. எங்கும் ஒரே இருள். அவன் மாமா வீட்டைச சுற்றி இருள் அதிகமாக இருந்தது. மற்ற இடங்களில் அவ்வளவு இருள் இல்லை. ஆங்காங்கு மின்விளக்கு எரிந்தது. அன்று ஊரிலிருந்து மாமா வந்த சேதி முருகன் செவிக்கு எட்டியது.

இரவு உணவு உண்டுவிட்டு மாமா வீடுநோக்கிப் புறப்பட்டான். ஊரிலிருந்து அவன் மாமா வரும்போதெல்லாம் முருகனுக்குத் தின்பண்டம் வாங்கிவருவது வழக்கம். அதனால்தான் இருளென்றும பார்க்காமல் ஓடினான் மாமா வீட்டி நோக்கி!

மாமா வீட்டை நெருங்க நெருங்க இருள் அதிகரிக்கலாயிற்று. முருகனுக்கு வழி நன்றாகத் தெரியவில்லை. அவன் மாமா வீட்டின் அருகில் புதருடன் கூடிய பள்ளம் ஒன்று இருந்தது. பாதை நனகு தெரியாததால் அவன் அந்தப் பள்ளத்தில் வீழ்ந்தான்.



அன்று இரவு வெகு நேரம் ஆகியும் வீடு திரும்பாத முருகனை அவன் பெற்றோர்கள் எங்கெங்கோ தேடினார்கள். இரவெல்லாம் தேடினார்கள். அவன் கிடைக்கவல்லை. பொழுது விடிந்ததும் சந்தேகத்தைப் போக்கிக் கொள்வதற்காக அந்தப் பள்ளத்தைப் பார்த்தார்களா. பாவம்! முருகன் படுகாயத்துடன் கிடந்தான்.

பெற்றவர்கள் பதறிப் போனார்கள். உடனே அவனைத் தூக்கி எடுத்து மருத்துமவனையில் சேர்த்தனா். அதிஷ்டவசத்தால் உயிர்பிழைத்தான். இந்தக் கதி அவனே தேடிக்கொண்டதுதானே. ஆகவே மாணவர்களே!

நாம் நமக்கு நன்மை செய்யும எதையும் நாசம் செய்யக்கூடாது. அப்படி நாசம் செய்தால் முருகனுக்கு நேர்ந்த கதிதான் நமக்கும் ஏற்படும்.

"தோல்வி குற்றம் ஆகாது. உயர்வற்ற லட்சியமே ஒரு குற்றமாகும்.
-ஜோம்ஸ் ரசல்

## தமிழுக்கு உள்ள சிறப்புக்கள்

உலகில் உள்ள மொழிகள் பலவற்றுள்ளம் தமிழ் தனிச்சிறப்புடையது என எமது ஆன்றோர் பெருமைபடக் கூறுவார்கள். மக்களுடைய வாழ்க்கையிற் பதினாறு பேறுகளும் இருக்குமாயின் அதுவே வாழ்வின் பூரணத்துவம் என்பார்கள். அந்தவிதத்திலே தமிழுக்கும் பதினாறுவகைச் சிறப்புக்கள் இருப்பதாக நம்முன்றோர் பெருமையுடன் எடுத்துக்கூறியுள்ளனர்.

தமிழுக்கு உரிய பதினாறு வகைச் சிறப்புகள் எவையெனில்,

தொன்மைச்சிறப்பு, தனிமைச்சிறப்பு, இனிமைச்சிறப்பு, இளமைச்சிறப்பு, எளிமைச்சிறப்பு, ஒலிச்சிறப்பு, உருபுச்சிறப்பு, சுழிச்சிறப்பு, பணபுச்சிறப்பு, எழுத்துச்சிறப்பு, சொற்சிறப்பு, பொருட்சிறப்பு, கவிதைசசிறப்பு, உவமைச்சிறப்பு, இலக்கணச் சிறப்பு, இலக்கியச்சிறப்பு என்பவாகும்.

பதினாறுவகைச் சிறப்புக்களையும் கொண்ட தனித்துவமான மொழி தமிழ் என்பதனால் தான் பாரதியாரும் 'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' எனத் தமிழின் தனித்துவத்தை எடுத்துக கூறியுள்ளார் எனலாம்.

நீர்வைமணி

## சிறப்பு தினங்கள் சில...

*நகைச்சுவை தினம் ~ஜனவரி 10

*தேசிய இளைஞர் தினம் ~ஜனவரி 12

*தேசிய அறிவியல் தினம் ~பெப் 28

*உலக வனநாள் ~மார்ச் 21

*சர்வதேச மகளிர் தினம் ~மார்ச் 8

*உலக ஊனமுற்றோர் தினம் ~மார்ச் 15

*உலக நீர் நாள் ~ மார்ச் 22

*உலக மக்கள் தொகை நாள் ~ஜீலை 11

*விளையாட்டு தினம் ~ஆகஸ்ட் 20

*தொலைத்தொடர்பு நாள் ~மே 17

*உலக வனவிலங்கு தினம் ~அக்டோபர் 4

# புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கையரை திருப்பி அனுப்ப பிரித்தானிய அரசு தீர்மானம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் புகலிடம மறுக்கபபட்ட இலங்கையர்களைத திருப்பியனுபபுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக் அந்நாட்டின இராஜாங்க செயலாளர் ஜெக்ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஆராய்வதற்காக பிரித்தானிய உள்துறை அமைச்சு அதிகாரிகள் குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளதாகவும் இராஜாங்க செயலாளர், வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் தஞ்சமடைநதவர்களுக்குப் புகலிடமளிக்கும் நடவடிக்கைகள் மிகவும் மந்தமாக நடைபெறுகிறதென்றும், இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கு முன்னர் அவர்களின் தேசிய இனம் எதுவென உறுதி செய்துகொள்ள வேண்டுமெனும் இலங்கையின் கோரிக்கையை ஏறறுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் பிரித்தானியா காட்டிவரும் சிரத்தையை இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் பாராட்டியுள்ளதுடன் இதனுடன் இணைந்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரும் விடயத்தில் இலங்கை முனைப்புடன் செயல்படுமெனவும் கூறியுள்ளார்.

இலங்கைக்கு பிரித்தானியாவினால் வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் பற்றி பாராட்டிப் பேசிய வெளிநாட்டமைச்சர் இது பற்றி இலங்கை அரசின் நன்றிக்கடனகளை கடந்த மார்ச் 4ஆம் திகதி ஜக்ஸ்ரோவை வெளிநாட்டமைச்சில் சந்தித்தபோது எடுத்துக கூறினார்.

10 வருட காலத்துக்கு இலங்கையின் பல்வேறு தரப்பு கடன் மீளச் செலுத்தும் தொகையினை பிரித்தானியா பொறுப்பெடுத்துக் கொண்டது பற்றி லக்ஷமன் கதிர்காமர் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

இதனால் இலங்கை எதிர்நோக்கும் நிதி நெருக்கடி மிகவும் இலகுவாகுமென்றும் இவ்வாறான உயர் நடவடிக்கையானது இரு நாடுகளுக்குமிடையில்ான உறவுகளின் உயர்வை எடுத்துககாடடுவதை அவர் குறிப்பிட்டார். (க-9)

# மாகாண சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்

(கொழும்பு)

அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது திருத்தப் பிரேரணையில் உள்ளடக்கிய விதிகளடங்கிய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவேண்டுமென மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அவ்வாறு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் மாகாண சபைகள் பொதுமக்களுக்கு விரிவான சேவையை வழங்க முடியுமென்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிறேம்லால் திஸநாயக்கா இதுதொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

நிர்வாகத்தை திறம்பட மேற்கொள்வதாயின் மத்திய அரசாங்கமும், மாகாண சபைகளும் ஒரே அரசியல் கட்சியின் கீழ் இருப்பது சிறந்ததெனக் கூறினார்.

மாகாண சபைகளுக்கான நிதியை மத்திய அரசாங்கம் ஒதுக்கும்போது அது தொடர்பாக கணகாணிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

ஊவா மாகாண முதலமைச்சர் விஜயமுனி சொய்ஸா, அபிவிருத்திகளைத் திறமாக மேற்கொள்வதற்கு அரசும் மாகாண சபைகளும் ஒருங்கிணைந்து செய்றபடவேண்டுமெனத் தெரிவித்தார்.


தென்மாகாண முதலமைச்சர் ஷாம் விஜயலால் டி.சில்வா, மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் சிலவற்றை மத்திய அரசாங்கம் மீளப் பெற்றுள்ளது என்றார்.

மேல்மாகாண முன்னாள் ஆளுநர் கே.விக்னேஸ்வரன், அரசின் அதிகாரஙகள சிலவற்றை மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டுமெனத் தெரிவித்தார். (க-7)

## கோட்டமட்ட விளையாட்டுப்போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி நிகழ்வில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜ இராமலீங்க வித்தியாலயங்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. யாழ்ப்பாணம் ஈ.எஸ்.பி நிறுவனத்தாரின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கோட்டத்துக்குட்பட்ட கூடுதலான பாடசாலைகள் பங்குபற்றியதாகவும் தெரிவிக்கப்படடது. (க-79)



கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சாரத்ன சுவாமி குருபூசையின் போது 'நயினை நாகபூஷணி - வரலாறும் தலப்பெருமையும்' எனும் நூல் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் நூலாசிரியர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்ரனுக்குத் தொண்டர்சபைச் செயலர் தீ.தம்புதுரைராசா கௌரவிப்புப் பரிசு வழங்குவதைப் படத்தில் காண்க.



விவசாயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென இந்திய உயர் ஸ்தானிகர் நிருபமாராவால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை சதாவதானி கதிரவேற்பிள்ளை நூல்நிலையத்தில் வைத்து சுவாமி சித்ரூபானந்தா கையளிக்கிறார்.

## மறைத்துவைக்கப்பட்ட எஞ்சின்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொத்தணி பஸ கம்பனிகளுக்குச் சொந்தமான 52 பஸ்களையும் 98 பஸ எஞ்சின்களையும் துஸ்பிரயோகம் செய்த மோசடியைப் போக்குவரத்து அமைச்சும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும கண்டுபிடித்துள்ளன.

இது தொடர்பாக நடாத்தப்படட விசாரணைகளிலிருந்து எஞ்சின்களை விற்பதற்காக மறைத்து வைக்கபபட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க-7)

## அபராதம் விதிப்பு

துன்னாலை கிழக்கைச் சோந்த காத்தான் குஞ்சன் என்பவா இரவு அருந்துவதற்கென 1/2 போத்தல் கசிப்பினை வாங்கி வைத்திருந்தவேளை பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் அவா அகப்பட்டுக்கொண்டார்.

இவரைக் கைதுசெய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில கடந்த செவ்வாய்கிழமை நிறுத்தியவேளை குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு 10ஆயிரம ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த அபராதத்தை செலுத்தத்தவறின் 4மாத காலம் சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் உத்தரவிட்டார். (ப-101)

## வைக்கோல் திருட்டு

இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மண் ஏற்றிவரும் டிரக்டர் உரிமையாளர்கள் கோவிலாக்கண்டி மறவன புலவு பகுதி வயல்களிலுள்ள வைக்கோல்களையும் சட்டவிரோதமாக ஏற்றி வருவதாக இப்பகுதி வயல் உரிமையாளர்கள் தரப்பில கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாரம் பெருமளவு வைக்கோல திருடப்பட்டுவருவதாக மேலும தெரிவிக்கப்படுகின்றது. (க-79)

# மக்கள் குறைகேள் அரங்கு

## அரச வர்த்தமானி தயாரிப்பது

## மனிதாபிமானமுள்ள மனிதனா? ஆண்டவனா?

எனக்கு வயது 31 ஆண்டுகள். அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த.(உ/த) பெறுபேற்றின் அடிப்படையில் அமைந்ததான போட்டிப் பரீட்சையில் நான் 158 புள்ளிகளைப் பெற்று கணிதபாட வகுதிக்கான நேர்முகப் பாட்சைக்குச் சமுகமளித்தும் எந்தவொரு பயனும் இல்லாமல் நடுத்தெருவில் நிற்கும் வயதான வாலிபன்.

கணிதபாடத் தெரிவிறகு க.பொ.த (உ/த) பரீட்சையில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய நான்கு பாடங்களையும் எடுத்து பல்கலைக்கழக அனுமதிப் புள்ளியையும் பெற்றிருக்கவேண்டும் என்பதே வர்த்தமானி அறிவுறுத்தலாகும்.

ஆனால் நான் க.பொ.த(உ/த) பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், பொருளியல், அளவையியல் ஆகிய நான்கு பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிப் புள்ளியையும் பெற்றிருந்தேன். பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களை எடுக்கவில்லை என்றும் அதனாலேயே நான் அந்தத் தகுதியிலிருந்தும் தட்டிக்கழிக்கப்பட்டதாகவும வர்த்தமானியின் அறிவுறுத்தலைக் காட்டி என்னை அச்சுறுத்துகின்றனர்.

வர்த்தமானி அறிவுறுத்தலைக் கடைப்பிடிக்கும் கடமையாளர்களாக நீங்கள் இருந்தால் ஆங்கிலபாடத் தெரிவில் ஏன் இவ்வாறான மனககுழப்பமான ஒரு செயற்பாட்டினை செய்துமுடிப்பீர்கள.

அதாவது அங்கிலபாட ஆசிரியர் தெரிவிற்கு உள்ளாகும் ஒரு நபர் க.பொ.த(உ/த) பல்கலைக்கழக அனுமதிப் புள்ளியினைப் பெற்றிருப்பதோடு, க.பொ.த(சா/த)த்தில் ஆங்கிலபாடத்தில் சாதாரண சித்தி (S) பெற்றிருந்தால் போதும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் கடைசியில் நடந்தது என்ன? கைக்கு எட்டியது வாய்க்கெட்டாத கதையாக மாணவர்களின் நிலை. அதாவது ஆங்கிலபாடத்தில் க.பொ.த(சா/த)த்தில் விசேட சித்தி அதாவது D பெற்றிருக்க வேண்டும் என்பதே அதன் நிலைப்பாடு. இதனால் 100ற்கும் அதிகமான மாணவர்களுக்கு மனம் குழம்பி மனவிரக்தியடைந்த ஒரு மாணவ சமுதாயமாக மாறிக்கொள்ளும் நிலையை ஏறபடுத்துவதை அரச அதிகாரிகள் உணரத் தவறுவது ஏன்?

ஓர் இடத்தில் வர்த்தமானி அறிவுறுத்தலையே கடைபபிடிப்போம் என்றும், இன்னுமோர் இடத்தில் வர்த்தமானி அறிவுறுத்தலை மீறுவதும் எந்தவகையில் நியாயமாகும்? வர்த்தமானியைத் தயாரிப்பது ஆண்டவனா? இல்லை ஆண்டவனால் படைக்கப்பட்ட உயர் அதிகாரிகளா? மௌனம் சாதிக்காது உடன் பதில் கூறுவார்களா?

க.பொ.த(சா/த)தில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி பெற்ற ஒரு மாணவன் தரம் 11 வகுப்பிற்குக் கீழ் ஆங்கில பாடம் கற்பிக்கமுடியும் என உங்களால் உறுதியாகக் கூற முடிந்தால், க.பொ.த.(உ/த)தில உயர்கணிதம் இரண்டு பாடஙகளோடு 4 பாடங்களிலும் சித்தியடைந்த ஒரு மாணவனால் தரம் 11 வகுப்பிற்குக் கழ் கணிதக் கல்வி கற்பிக்கமுடியாதவர்கள் என்று உங்களால் எப்படி உறுதியாகக் கூறமுடியும்?

மாணவர்களாகிய நாம் கேட்கும் எந்தவொரு கேள்விக்கும் வர்த்தமானி அறிவுறுத்தல் என்று காரணம் காட்டுவதை விட்டுவிட்டு மனிதாபிமான சிந்தனையோடு நமக்கு நல்ல பதிலைத் தர தகுதியுடையவர்கள முயற்சி செய்யுங்கள்.

இப்பரீட்சைக்கென வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவுறுத்தலின் படி பல சிக்கல்கள் மாணவர் மத்தியில் எழுந்துள்ளன. இவ்வாறு பாதிப்புக்குள்ளான அனைத்து மாணவர்களும் தகுந்த முறையில் கவனிக்கப்பட்டு அவர்களின் எதிர்கால விடிவிற்கு வழி ஏற்படுத்திக்கொடுப்பார்களா சம்பந்தப்பட்டவர்கள்?

98 புள்ளிகளைப் பெற்றவன் அரச சபையில். 150ற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற பல நூறு மாணவர்களோ நடுத்தெருவில். 100 புள்ளி எடுப்பது என்பது தரம் 5 வகுப்பிற்குரிய பிள்ளையும சாதாரணமுறையில் எடுக்கும் என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

இப்பரீட்சையில் 140ற்கு மேல் புள்ளி பெறுவதென்றால் அந்த மாணவன் ஒரு திறமைசாலியாகத்தான் இருக்கவேண்டும் என்பதையும் உரியவர்கள் உணரத் தவறுவது ஏன்? ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு விதமான வெட்டுப்புள்ளி என்றால் அந்தப் பாடத்திற்கு அந்தப் பாடங்களில் போட்டிப் பரீட்சையை நடாத்தி இருக்கலாம்தானே?

இங்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான பாடங்கள், (i)பொது அறிவு (ii)பொது உளச்சார்பு. பொது அறிவு ஞாபக சக்தியை உறுதிப்படுத்துவதாகவும், பொது உளச்சார்பு கிரகிக்கும் திறனை விரைவுபடுத்துவதாகவும் அமைந்த இரண்டு பரீட்சைகளாகும். இந்தவகையில் பார்க்கும்போது கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள்தான் எந்தவொரு பாடத் தெரிவிற்கும் தகுதியானவர்கள் என்பது தெரிகின்றது அல்லவா?

எந்தவொரு காலத் தலும் இல்லாத இந்தவகை தெரிவிற்காக தோற்றியும் தகுதி பெறாது மனம் உடைந்து உளவியல் சிக்கல்களுக்கு உள்ளாகி நோய்வாய்ப்படும் நிலையில் உள்ள என் போன்ற மாணவர்களுக்கு தகுந்த முறையில் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு தகுதிவாய்ந்த கல்வி அதிகாரிகளின் கடமையல்லவா? செய்வார்களா?

**மிகவும் பாதிப்புக்குள்ளான**
**மாணவர்களில் ஒருவன்.**

# கொக்குவில் இந்துக் கல்லூரியில் பேடன் பவல் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவலின் நினைவுதினம் அண்மையில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் சாரணர் இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சாரணிய ஆணையாளர் எஸ்.ஏகாம்பரநாதன பிரதம விருந்தினராகவும், கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி குணரெத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கல்லூரி அதிபர் லொ.கமலநாதன் வாழ்த்துரையையும் சாரணியப் பொறுபபாசிரியர் மு.சுகுமார் தொடக்கவுரையையும நிகழ்த்தினர். (ந)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 14



### அத்தியாயம் IV

*விவாதமுற்று*

சபையால் விவாதிக்கப்படும் ஒரு விடயம் விவாதமுற்றுப் பிரேரணையொன்றின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றது. "பிரேரணை இப் பொழுது சபைக்கு விடப்படுமாக" என்று முன்மொழிவதன் மூலம் அத்தகைய ஒரு பிரேரணை பிரேரிக்கப்படுகின்றது. ஒரு விவாதமுற்று ஓர் அமைச்சரின் உரையின் முடிவில் (அது அரசாங்க அலுவலாக இருப்பின்) அல்லது வேறு எவரேனும் உறுப்பினரால் பிரேரிக்கப்படலாம்.

விவாதமுற்றுப்பிரேரணை சபையின் விதிகளைத் துர்ப்பிரயோகம் செய்யாதிருத்தலையும் சிறு பான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுதலையும் சபாநாயகர் உறுதிப்படுத்தவேண்டும் "சிறுபான்மை" என்று இங்கு கருதப்படுவது பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிகளையே விவாதமுற்றுப்பிரேரணையொன்றைப் பிரேரிக்கின்ற போது விவாதத்தில் போதிய நேரம் செலவிடப்படுள்ளடுள்ளதென அக்கிராசனர் திருப்தியடைய வேண்டும். எனவே ஒரு விவாதமுற்றுப் பிரேரணை நியாயமான விவாதத்துக்கான உரிமைகளை மீறுகின்றதாவெனச் சபாநாயகர்தான் தீர்மானிக்கவேண்டும்.

விவாதமுற்றுப் பிரேணையொன்றை ஏற்றுக்கொள்வதற்கான தற்றுணிவு சபாநாயகருக்குள்ளது. ஒரு விவாதமுற்றுக்கான பிரேரணை விடுக்கப்பட்டால் மேலும் விவாதம் காரணகாரியவிளக்கம் அல்லது மேல் முறையீடு எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது ஆனால் விவாதத்தை முடிப்பதா இல்லையாவென்று சபை வாக்களிக்கலாம்.

அவசர விடயங்கள் எடுக்கப்படுகையில் அரசாங்கங்கள் சில சமயங்களில் எதிர்க்கட்சிகளின் உரிமைகளை மறுக்கின்ற வகையில் விரும்பத்தகாத அளவுக்கு வழமையான நேர ஒதுக்கீடுகளை வெட்டிக் குறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. விவாத முற்றுத் தொடர்பான ஏற்பாடுகள் நிலையியற் கட்டளை 41 இல் காணப்படுகின்றன. விவாதமுற்றுப் பிரேரணையொன்றின் மீது ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதற்கு ஆதரவாக இரு பதுக்குக் குறையாத உறுப்பினர்கள் பெரும்பான்மையாக வாக்களிக்க வேண்டுமென்பதைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அதேவகையில் குழுவொன்றில் ஒரு விவாதமுற்றுப் பிரேரணை பிரேரிக்கப்பட்டால் அதற்கு ஆதரவாக குறைந்த பட்சம் குழுவின் கூட்ட நடப்பெண்ணுக்கு சமமான எண்ணிக்கையிலான பெரும்பான்மையினர் வாக்களிக்கவேண்டும்.

விவாதங்களுக்கான நேர ஒதுக்கீடுகள் பற்றிப் பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு உடன்பாடு காண்பதனால் ஒரு விவாதமுற்றுப் பிரேரணை மிக அரிதாக நாடப்படுகின்ற கடுமை வாய்ந்ததும் கடைசிக் கட்டத்துக்குரிய துழான ஒரு நடவடிக்கையாகும்.

### அத்தியாயம் V

*வாக்களிப்பு*

விவாதமொன்று முடிவுற்றதன் பேரில் அல்லது முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் அப் பிரேரணை வாக்களிப்பொன்றின் மூலம் தீர்மானிக்கப்படுவதற்குச் சபைக்கு விடப்படுகின்றது. ஒவ்வோர் உறுப்பினரும் வாக்கொன்றுக்கு உரித்துடையவரென்பதுடன் அவர் அதனை நேரடியாகப் பிரயோகிக்கவும் வேண்டும். வாக்களிக்கும்போது ஓர் உறுப்பினர் அவருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் இருக்கவேண்டும். வாக்களிப்பின் போது வேறோர் உறுப்பினரை ஆள்மாறாட்டஞ் செய்கின்ற ஓர் உறுப்பினர் பாரதூரமான சிறப்புரிமை மீறலைப் புரிகின்றாரென்பதுடன் அவமதிப்புக்கும் குற்றவாளியாகின்றார். சபை முன் விடப்பட்டுள்ள ஒரு விடயத்தில் தனிப்பட்ட அல்லது பொருள்ரீதியான அக்கறையுடைய ஓர் உறுப்பினர் வாக்களிப்பிலிருந்து தவிர்த்தல் நல்லது சபை அமர்வில் இருக்கின்றபோது மட்டும்தான் வாக்களிப்பு இடம்பெறலாம் எனவே சபை ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் இடம்பெறுகின்ற ஒத்திவைப்புப் பிரேரணைகள் அல்லது கேள்விகள் மீது வாக்கெடுப்பொன்று நடத்தப்பட முடியாது.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் தமது வாக்காளர்களுக்காகவும் தொகுதி மக்களுக்காகவும் செயற்படுகின்றார்கள். தமது பிரதிநிதிகள் எவ்வாறு வாக்களித்தார்களென்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். எனவே அரசியலமைப்பின் உறுப்புரை 40(1) ஆ இன் கீழ் ஜனாபதியைத் தெரிவு செய்வதற்குத் தவிர வேறெந்த நோக்கத்துக்காகவும் இரகசிய வாக்கெடுப்பைப் பயன்படுத்த முடியாது.

*பாராளுமன்றத்தால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுதல்*

அரசியலமைப்பின் உறுப்பரை 40(1) (அ) இன் கீழ். ஜனாதிபதியின் பதவி அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக வறிதாகினால் பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களில் ஒருவரை அப்பதவி வெற்றிடத்துக்குத் தெரிவு செய்யவேண்டும். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் அத்தகைய தேர்தல் வெற்றிடம் ஏற்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குப் பிந்தாமல் நடத்தப்பட வேண்டுமென்பதுடன் தெரிவு செய்யப்படும் ஆள் அளிக்கப்பட்ட வாக்குகளின் அறுதிப் பெரும்பான்மை மூலமும் தெரிவு செய்யப்படவேண்டும். பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளபோது ஜனாதிபதியின் பதவி வறிதாகுமாயின் புதிய பாராளுமன்றம் அதன் முதலாவது கூட்டத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் ஒரு புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யவேண்டும் அமர்வு நிறுத்தமொன்றின் போது அது ஏற்பட்டால் அவ்வெற்றிட நிகழ்வு மூன்று நாட்களுக்குள் பாராளுமன்றம் கூடுவதற்கான ஓர் அழைப்பாணையாகச் செயற்படுகின்றது. இவ்விடயத்தில் 1981 இல் 2ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மேலும் ஏற்பாடுகளை விதித்துரைக்கின்றது. மேற்படி சட்டத்தின் 11ஆம் பிரிவின்படி அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அரைப்பங்குக் கூடிய வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்றவராவார். அச்சட்டத்தின் 8 ஆவது பிரிவு விருப்புத் தெரிவுகளைக் குறிப்பதற்கும் 12ஆவது பிரிவு சமநிலை காணப்படும்போது விருப்புத் தெரிவுகளை எண்ணுவதற்கும் ஏற்பாடு செய்கின்றது.

மேற்படி நடைமுறைகள் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. ஏனெனில் அவை சம்பந்தப்பட்ட ஒரேயொரு சந்தர்ப்பம் 1993இல் ஜனாதிபதி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து எழுந்தபோது அவருக்குப் பின்வந்தவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

*வாக்களிக்கும் நேரத்தில் கூட்ட நடப்பெண்*

சபையில் குறைந்தபட்சக் கூட்ட நடப்பெண் இல்லாத போது வாக்கெடுப்பொன்றை நடத்தலாமாவென்ற கேள்வி வேறு சட்டசபைகளில் எழுந்துள்ளது. எனினும் கூட்ட நடப்பெண் இல்லாமை "குரல் வாக்களிப்பை"ப் பாதிக்கவில்லை என்பதும் குறைபட்சக் கூட்ட நடப்பெண் இருந்தலான்றிப் பெயர் மூலம் வாக்கெடுப்பு நடதத்க் கூடாதென்பதும் முடிவு செய்யப்பட்ட ஒரு வழக்கமாக எடுத்துக்கொள்ளப்படலாம். பெயர் மூலமான வாக்கெடுப்புக்கு முன்னர் வழமையாக வாக்கழைப்பு மணி ஒலிக்கப்படுகின்றது. அது சபா மண்டபத்தில் உறுப்பினர்கள் சமுகமாயிருப்பதற்கான ஒரு சமிக்கையாகும்.

*42ஆம் 43ஆம் நிலையியற் கட்டளைகளின் கீழான வாக்களிப்பு*

மிகப் பொதுவான வாக்களிப்பு முறை தீர்மானத்துக்கு சார்பானவர்கள் 'ஆம்' என்றும் எதிரானவர்கள் 'இல்லை' என்றும் கூறுகின்ற குரல் வாக்களிப்பு சபையின் அபிப்பிராயத்தை 'ஆம்கள்' அல்லது 'இல்லைகள்' போதிய அளவிலும் தெளிவாகவும் வெளிப்படுத்தியுள்ளனவென்று சபாநாயகர் கருதுகின்றபோது அதனை அவர் அறிவிக்கலாம். அத்தோடு பிரேரணை முடிவு செய்யப்பட்டதாகின்றது. சபாநாயகரின் முடிவில் திருப்தியடையாத எவரேனும் உறுப்பினர் பெயர் மூலம் வாக்கெடுப்பொன்றைக் கோரலாம். அதன் பேரில் இரு நிமிடங்களுக்கு வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டுப் பின்னர் பெயர் மூலம் வாக்கெடுப்படுகின்றது. அத்தகைய ஒரு வாக்கெடுப்பு ஓர் உறுப்பினர் பிரேரணைக்குச் சார்பாகவா எதிராகவா வாக்களித்தார் அல்லது வாக்களிப்பிலிருந்து விலகிக் கொண்டாரா அல்லது வரவில்லையா என்பதைப் பதிவு செய்யும்.

(தொடரும்)

# ஆளுநர் டிரோன் கூட்டிய மாநாட்டை கூட்டமைப்பு எம்.பிக்கள் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கூட்டிய உயர்மட்ட மாநாட்டில் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இம் மாவட்டத்தில் சுனாமி நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வற்காக மாவட்ட செயலகத்தில் இந்த மாநாடு கூட்டப்பட்டது. இதில் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளாத நிலையில் குறிப்பிட்ட விடயங்கள் பற்றி ஆளுநர் திணைக்களத் தலைவருடன் மட்டும் கலந்தாலோசித்து விட்டு திருகோணமலை திரும்பினார்.

தமிழீத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 4 பேரும் தற்போது மட்டக்களப்பிலேயே தங்கியுள்ள போதும், ஆளுநர் கூட்டிய மாநாட்டில் ஏன் கலந்துகொள்ளவில்லை என அவர்களில் ஒருவரிடம் கேட்டபோது,

சுனாமிக்குப் பின்பு அமைச்சர்களும் ஆளுநரும் வந்து போகின்றார்களே தவிர பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்ற இதுவரை காலமும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை பதிலாக வாக்குறுதிகள் மட்டுமே கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கிய கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும் வரை இப்படியான மாநாடுகளில் நாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டார்.

(க-7,4)

# படையினரின் கெடுபிடிகளால் கிழக்கு மக்கள் பெரும் அச்சம்

## - ஜெயானந்த மூர்த்தி எம். பி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள அவசர கடிதமொன்றில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் படுகொலைகளைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் இதனால் மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், படைமுகாம்களைப் பலப்படுத்துதல், வீதிகளில் புதிய இராணுவ முகாம்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் போர் நிறுத்த உடன்படிக்கையினை மீறும் செயல்களாகவே காணப்படுகின்றன எனவும் அவர் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(க-7,4)

# சந்தேக நபர் தலைமறைவு

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சைக்கிள் பாதுகாப்பு நிலைய ஊழியர் ஜெயராஜா ராஜு மீது கடந்த வெள்ளிக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக புளொட் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

காயமடைந்த நபர் பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் தன்னைச் சுட்டவர் புளொட் உறுப்பினர் அலன் எனத் தெரிவித்துள்ளார். இவரது வாக்குமூலத்தையடுத்து சந்கேநபரைப் பொலிஸார் தேடுகின்றனர். இதனால் புளொட் உறுப்பினரான அலன் தலைமறைவாகியுள்ளார். இவரைத் தேடும் நடவடிக்கைகளில் மட்டக்களப்புப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(த)



நாட்டுப்பற்றாளர் வே. க. ஏரம்பு ஆசிரியருக்கு கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நடத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் அஞ்சலிக்கூட்ட நிகழ்வுகளினது படத்தொகுப்பு.




# பீற்றர் ஹரோல்ட் மீது பாயும் பேரினவாத சக்திகள்

உலக வங்கியின் கொழும்பு வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டை 'வெள்ளைப் புலி'யென முத்திரை குத்தி நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான முயற்சியில் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகள் முனைப்புடன்



இறங்கியுள்ளன. இந்நடவடிக்கைக்கு பீற்றர் ஹரோல்ட் இலங்கையின் ஐக்கியத்துக்கும், இறைமைக்கும் மாறாகப் பேசியுள்ளதோடு, பிரிவினைக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் என்பதே பேரினவாதிகளின் விளக்கமாகும்.

இவ்வாறு பேரினவாதிகள் போடும் கூச்சலுக்கு, அண்மையில் கொழும்பில் இருந்து வெளியாகும் ஊடகம் ஒன்றிற்கு பீற்றர் ஹரோல்ட் வழங்கிய பேட்டியில் கூறிய சில விடயங்களே காரணமாகும். அவர் அப்பேட்டியில் ''உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஒரு வகையிலான உத்தியோகப்பற்றற்ற அரசு இருக்கின்றது என்ற உண்மைப் பிரகாரமும், அரசாங்கத்துடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தில் அது ஒரு தரப்பு என்பதாலும், சட்டப்படியான பங்குதாரராக இருப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு தகுதி உண்டு'' என்றும் கூறியமை தொடர்பாகவே பௌத்த பேரினவாத சக்திகள் தற்பொழுது பீற்றர் ஹரோல்டை நாட்டை விட்டு வெளியேற்றி விடுதல் என்பதில் முனைப்புடன் களத்தில் குதித்துள்ளன.




இத்தனைக்கும், பீற்றர் ஹரோல்ட் தான் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியானது திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பேட்டியில் இடம்பெற்றுள்ள சில வார்த்தைகளைத் தான் பிரயோகிக்கவில்லையெனவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இது ஒருபுறம் இருக்க, பீற்றர் ஹரோல்ட் கூறியதாக வெளியான தகவலில் தவறு ஏதும் உண்டா? என்பதும் கேள்விக்குரியதே.

ஏனெனில் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றை செய்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளைச் சமபங்காளிகளாக ஏற்று பேச்சுவார்த்தைகளையும் நடாத்தியுள்ளது. இவை கடந்த அரசாங்கத்தின் போது நடந்தவையாகத் தற்போதைய அரசாங்கம் தட்டிக்கழித்து விடவும் முடியாது. ஏனெனில் யுத்த நிறுத்த உடன்பாடு இன்னமும் அமுலிலுள்ளது. முன்னைய உடன்பாட்டில் எதுவித மாற்றமும் செய்யப்பட்டதாகவும் இல்லை.

இவை ஒரு புறம் இருக்க பீற்றர் ஹரோல்ட் கூறியிருப்பது போன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உத்தியோகபற்றற்ற அரசு ஒன்று இருக்கின்றது என்பதை எவருமே நிராகரித்துவிட முடியாது. ஏனெனில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கென ஒரு சிவில் நிர்வாகமும், காவல்துறை, நிதித்துறை, நீதித்துறை, அரசியல்துறை உட்பட பல்வேறு துறைகளுமுள்ளன. அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசிப்பவர்கள் சோதனைச் சாவடியில் அனுமதி பெற்றாக வேண்டும்.

இதேசமயம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி தனித்துவமான நிர்வாகக் கட்டமைப்புடன் கூடியது என்பதை ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளும், தெளிவுபடுத்துபவையாகவே உள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வோர், அங்கிருந்து வருவோர் இராணுவச் சோதனைச் சாவடியில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். பொதிகளைச் சோதனையிட அனுமதிக்க வேண்டும். அதாவது ஒரு அரசிற்குள் ஆயின் இப்பதிவுகளும், சோதனைகளும் ஏன? எல்லைப் பகுதி போன்று நடவடிக்கை ஏன்?

இதற்கப்பால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளைப புனரமைக்க 600 கோடி ரூபாய்களை உலகவங்கி செலவிடவுள்ளதாகவும், இந்நிதி விடுதலைப்புலிகளின் கலந்தாலோசனையுடன் அரச முகவர் நிலையங்களுக்கூடாக செலவிடப்படும் எனக் கூறியமையே பேரினவாதிகள் பீற்றர் ஹரோல்ட் மீது சினங் கொண்டதற்கு மற்றுமொரு காரணமாகும்.

அதாவது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பெரும் தொகை நிதியை உலக வங்கி செலவிடுவதற்குப் பீற்றர் ஹரோல்ட் காரணமாகியுள்ளார் என்பதே அவர்களின் சீற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும். சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு~கிழக்கு மாகாணங்களுக்கு குறிப்பாகத் தமிழ்மக்களுக்கு உடனடியாக வெளிமாவட்டங்களில் இருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்களையே சூறையாடிய பேரினவாத சக்திகளுக்குப் பெரும் தொகை நிதியை வடக்கு~கிழக்கில் செலவிடுதல் என்பது எவ்வாறு ஏற்றுக் கொள்ளத்தக்கதொன்றாக இருக்கும்?

இந்நிலையிலேயே பௌத்த~சிங்களப் பேரினவாத சக்திகள் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி மீது சீறிப்பாய்ந்துள்ளனர். சிங்களப் பேரினவாத சக்திகள் உலக வங்கிப் பிரதி நிதியின் செயலுக்கு மட்டும் தான் இவ்வாறு ஆட்சேபம் தெரிவிக்கின்றனர் என்பதல்ல. இதேபோன்று பலர் மீது இத்தகைய ஆட்சேபங்களை பௌத்த~சிங்கள அடிப்படைவாத சக்திகள் எழுப்பியமையும், அவர்களை ஆட்சியாளர்கள் இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் வெளியேற்றுகின்றமையும், ஸ்ரீலங்காவில் வழமையான நடவடிககைகள் ஆகியுள்ளன.

இந்த வகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் இருவர், கொழும்பு வதிவிடப்பிரதிநிதிகள், சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி ஒருவர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதிய கிளிநொச்சி மாவட்ட பிரதிநிதி ஒருவர் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஒருவர் எனப் பலர் ஏற்கனவே வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேசமயம் இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய பங்காற்றிய நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மற்றும் விசேட தூதுவராகப் பணியாற்றி வரும் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் ஸ்ரீலங்கா அரசால் வெளியேற்றப்பட்டவர்களாக அன்றி விரும்பத்தகாதவர்களாக இருந்தவர்கள் என்பதும், அவர்களை இராஜதந்திர நடவடிக்கை மூலம் வெளியேற்ற அரசாங்கம் முற்பட்டதென்பதும் ஏற்கனவே அறியப்பட்ட தகவல்களே. இவர்கள், ஐ.நா. செயலர் கோபி அனானைக்கூட விட்டு வைத்ததாக இல்லை.


அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயலாற்ற முற்பட்ட சர்வதேச நிறுவனங்களின், அரசுகளின் பிரதிநிதிகள் எப்பொழுதும் ஸ்ரீலங்காவிற்கு வேண்டப்படாதவர்களாக, ஸ்ரீலங்காவில் விரும்பப்படாதவர்களாக இருந்துள்ளனர் என்பதே உண்மையானதாகும். ஆகையினால் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்திலும் சரி, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளிலும் சரி ஈடுபடுபவர்கள் இதனைப் புரிந்துகொள்ளுதல் அவசியமானதாகும்.

ஸ்ரீலங்காவில் விரும்பப்படாதவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பொதுவில் பௌத்த~பேரினவாத அமைப்புக்களின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டு ~ அவை இனவாத ஊடகங்களூடாக மக்களிடம் சென்றடைந்து பின்னர் அரசாங்கம் அதனைப் பொறுப்பேற்று இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் முனைப்புப்படுத்தி இவற்றை முடித்து வைப்பதே வழமையானதாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக முன்னாள் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை வெளியேற்ற அரசாங்கம் மேற்கொண்ட வழிமுறைகளும், உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டை வெளியேற்ற மேற்கொண்ட வழிமுறைகளையும் அவதானிப்பின் புரிந்து கொள்ளலாம்.

நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஸ்ரீலங்கா அரசிற்கும்~விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்படுவதற்குப் பெரும் பங்காற்றியவர். ஆனால் அவர் ஸ்ரீலங்காவில் சந்தித்த அவமானங்களும், அவமதிப்புக்களும் ஏராளம் என்றே கூறலாம்.

ஆரம்பம் முதலே ஜோன் வெஸ்பேர்க் சிங்களப் பேரினவாத சக்திகளின் கண்டனங்களுக்குள்ளாகி இருந்தார். இதிலுள்ள வேடிக்கை என்னவெனில் இனப்பிரச்சினைத் தீர்வில் ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருந்த போதும், அவரது அரசாங்கத்தில் அன்று பிரதம



மந்திரியாக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க போன்றவர்கள் ஜோன் வெஸ்பேர்க்கை அவமானப்படுத்த முனைந்தமையாகும்.

ஆனால் வெஸ்பேர்க் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குப் பெரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தார். இருப்பினும், விடுதலைப்புலிகள் வானொலி உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள உதவினார் என்று பௌத்த~சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் கூச்சலிட்டதைத் தொடர்ந்து தனது பதவிக்காலத்தை நீடிப்புச் செய்து கொள்ளாமல் ஜோன் வெஸ்பேர்க் வெளியேறினார்.

ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்த அளவில் விரும்பப்படாதவர்களை வெளியேற்றுதல் என்பதில் மூன்று சக்திகள் முனைப்புடன் செயற்படுவதை அவதானிக்க முடியும். அதாவது பௌத்த~சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களோ அன்றி பௌத்த~சிங்களப் பேரினவாத ஊடகங்களோ இவ்விவகாரத்தை முதலில் கையில் எடுத்துக்கொள்ளும்.

இதில் ஊடகங்கள் முதலில் தொடங்கினால் அடிப்படைவாத அமைப்புக்கள் அவற்றை ஊதிப் பெரிதுபடுத்தும், பௌத்த~சிங்கள அடிப்படைவாத அமைப்புக்கள் தொடங்கினால் ஊடகங்கள் அவற்றை ஊதிப் பெரிதுபடுத்தும். இதன் பின்னர் அரசாங்கம் அதனைக் கையில் எடுத்து விவகாரத்தை முடிவிற்குக் கொண்டுவர இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளும்.

இந்த வகையில் பீற்றர் ஹரோல்ட் தொடர்பான சர்ச்சையை ஊடகங்கள் உருவாக்கி பௌத்த~சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களிடமும்~பேரினவாத அரசியல்வாதிகளிடமும் ஒப்படைத்துள்ளன. இவர்கள் தற்பொழுது பீற்றர் ஹரோல்டிற்கு வெள்ளைப்புலி எனப் பட்டம் சூடியுள்ளனர். இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக அரசாங்கம் இனி இராஜதந்திர முயற்சிகள் மூலம் ஹரோல்ட்டை வெளியேற்ற முற்படுதல் கூடும்.

அதாவது ஸ்ரீலங்காவைப் பொறுத்து ஆட்சியாளர்கள் மட்டும் பௌத்த~சிங்கள நலன்விரும்பிகளாக, இனவாதிகளாக இருந்துவிட்டால் போதாது. ஸ்ரீலங்காவில் பணிபுரிய வரும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் என்பவர்களும் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின் கொள்கை, கோட்பாடுகளை ஆதரிப்பவர்களாக இருக்க வேண்டும். அதாவது இனஒடுக்கு முறைக்கு அனுசரித்துப் போபவர்களாகவும் ஆதரவளிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு அனுசரணை புரிபவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிடில் அவர்கள் இலங்கையின் இறைமைக்கும், ஐக்கியத்துக்கும் ஊறுவினை விப்பவர்களாகவே நோக்கப்படுவார்கள். இதன் இறுதிக் கட்ட நிகழ்வாக அவர்கள் இலங்கையை விட்டு வெளியேற வேண்டியவர்களாக அன்றி வெளியேற்றப் படுபவர்களாக இருப்பார்கள். □

**இணையத்தளத்திலிருந்து...**

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். - குறள்

வலம்புரி

## மனித உரிமைப்பொதுச்செயலரின் மதிநுட்பம் நிறைந்த உரை

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வாழலாம் என்ற நம்பிக்கையை தமிழ்மக்கள் இழந்துவிட்டனர். எனவே அவர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தக் கூடிய சூழ்நிலை தோன்றலாம்.

இவ்வாறு மனித உரிமை பொதுச்செயலாளர் வெரீனா பிராப் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் 61வது மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலில் கருத்துக்கூறும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் இன முரண்பாடுகளும், தீர்வுகளும் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட மக்களின் விடுதலைக்கும், உரிமைக்குமான சர்வதேச அமைப்பின் பொதுச்செயலர் வெரீனா பிராப் ஐக்கியநாடுகள் சபையில் உரையாற்றும் போது கூறுகையில்,

இலங்கையில் இரு தசாப்தங்களாக இடம் பெறும்போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களால் இந்த நிலை உருவாகியுள்ளது.

தமது இருப்பிடங்களை விட்டு இராணுவம் வெளியேறவேண்டுமென தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் இராணுவம் அதனைப்பொருட்படுத்தாமல் நிலைகொண்டுள்ளது.

இதனால் மக்கள் இராணுவத்தினர் மீதுவெறி கொண்டு சின்னச்சின்னக் காரியங்களுக்கும் அவர்கள் மீது கல்லெறிகின்றனர். அத்துடன் ஹர்த்தால்களையும், போராட்டங்களையும் நடத்துகின்றனர் இது முற்றுப்பெறும் என நான் நினைக்கவில்லை.

இலங்கையின் இனவிவகாரம் குறித்து ஐ.நா. சபையில் உரையாற்றிய வெரீனா பிராப் கூறிய கருத்துக்கள் இலங்கை மக்கள் அனைவராலும் உன்னிப்பாக கவனிக்கவேண்டிய ஒன்றாகும்.

நோய் ஒன்றாகவும் மருந்து வேறாகவும் இருந்தால் நோய்முற்றி மரணம் ஏற்படுவது தவிர்க்க முடியாது போய்விடும். அந்தநிலைமையே இலங்கையில் நிலவுகின்றது. இதனை வெளிநாடுகளில் இருந்து வந்த தூதர்கள் புரிந்துகொள்ளாவிடினும் சர்வதேச மனிதஉரிமைக்கான பொதுச் செயலர் மிகநிதானமாகப் புரிந்துகொண்டு அதனை வெளிப்படுத்தியும் உள்ளார்.

அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஆய்வுமுடிவுகளை இலங்கை அரசு சீர்தூக்கிப்பார்க்கும் ஆயின் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகைகள இலகுவில் கிடைத்துவிடும். இலங்கை அரசைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை தொடர்பில் நிதானமான ஆய்வு எதனையும் மேற்கொள்ளவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டுமாயின் முதலில் மக்களின் பிரச்சினை என்ன? அவர்கள் எந்தத தீர்வை எதிர்பார்க்கிறார்கள்? இராணுவத்துடன் மக்கள் முண்டிக்கொள்வதற்கான காரணம் என்ன? என்பதுபற்றி மிகநிதானமாக, நடுநிலையுடன் உள்ளார்ந்தமாக ஆய்வுசெய்யவேண்டும்.

அவ்வாறு ஆய்வு செய்வதன் மூலமே நாம் அறியாத விடயங்களை அறியக்கூடியதாக இருக்கும் ஆனால் இலங்கை அரசுக்கு இது பற்றி எந்தநோக்கமும் இல்லை ஆக, தமிழ்மக்களின் உரிமைப்போராட்டங்களை நசுக்குவது மட்டுமே அவர்களின் நினைப்பு.

அந்த நினைப்பு இனிமேல் சரிவராது என்பதை தெரிந்துகொண்ட பின்னரும் இனப்பிரச்சினைக்கு இதய சுத்தியுடன் தீர்வுகாணும் எண்ணம் அரசுக்கு ஏற்படவில்லை.

மாறாக் காலத்தை இழுத்தடிப்பதன் ஊடாக தமிழர்களின் உரிமைப்போராட்டத்திற்கு பழுது வந்துவட்டால் அது பெருவாய்ப்பாகி விடும் என்றே அரசு கருதுகின்றது.

எனினும் இது எதுவுமே சரிப்பட்டு வராது என்ற உண்மையை ஐ.நா.சபையில் வெரீனா பிராப் கூறியிருப்பது அரசுக்கு நல்லதோர் பாடப் படிப்பிப்பாகும்.

# வடக்கில் மீளக்குடியமரும் முஸ்லிம்களை தமிழ்ச் சமூகம் அரவணைக்க வேண்டும்

## அமைச்சர் றிஷாட் பதியுதீன் வலியுறுத்து

(புத்தளம்)

வடக்கில் பாரம்பரியமாக ஒன்றுபட்டு வாழ்ந்த முஸ்லிம்-தமிழ மக்கள் இடம் பெயர்வால் உறவில் பிரிந்து வாழ்கினறனர். முஸ்லிம்-தமிழ் மக்களின் உறவை மீளக் கட்டியெழுப்புவதற்கான நல்லதோர் சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளதாக புனர்வாழ்வு வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அண்மையில் மன்னார் முத்தறிப்புத் துறைக்கு விஜயம் செய்த அமைச்சர் றிஷாட் பதியுதீன் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நேரில் கேட்டறிந்து கொண்டார்.

அதன் பின்னர் முத்தறிப்பு பாடசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பங்குத் தந்தை ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் றிஷாட் பதியுதீன் மேலும் பேசுகையில கூறியதாவது,

யுத்தமா? சமாதானமா? என்ற கேள்வி இன்று பரவலாக எழுப்பப்பட்டு வருகின்ற போதிலும், யுத்தத்தால் அழிந்து போன பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளாகிய எம்மிடத்திலேயே உள்ளது.

மக்களது வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் வெறும் எம். பிக்களாக மட்டும் இருந்துவிட்டுச் செல்வது மக்களுக்கு எவ்வித பலனையும் பெற்றுக் கொடுத்து விடாது. அதற்காக அமைச்சுப் பொறுப்புக்களிலோ அல்லது அரசாங்கத்தின் 'கூஜா' தூக்கிகளாகவோ இருக்க வேண்டும்என்று கூறவில்லை.

அதறகு மாறாக மக்களுக்கான அபிவிருத்திகளை, அதே வடிவில் இன,மத பிரதேச பாகுபாடுகளின்றி பெற்றுக் கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகும்.

யுத்தவடுவாலும், சுனாமி அனர்த்தத்தாலும் பாதிப்புக்குள்ளான வடக்கு மக்களது அபிவிருத்திகளை இனத்துவேஷங்களை சுட்டெரித்துக் கொண்டு முன்னெடுத்து செல்வதற்காக இந்த அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றோம்.

இதன மூலமும் சகல சமூகமும் சமமான தமது உரிமைகளையும், அபிவிருத்தியின் பங்குகளையும் அடைவதை உறுதிப்படுத்துவேன். மீண்டும் தமது தாயகத்தில் வடக்கு முஸ்லிம்கள மீளக்குடியமரும் நிலையில் தமிழ்ச் சமூகம் அவர்களையும் அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.இநத நிகழவில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் நீக்கலாபிள்ளை, மன்னார் பிரதேச செயலாளர் முன்னாள் எம்.பி. எம். என்அப்பூப் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (ற-15)

## துணைவேந்தரின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டமை

# மருத்துவ பீட மாணவர்களின் செயற்பாட்டுக்கு யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சத்திர சிகிச்சை பயிற்சி நெறியை மீள ஆரம்பிப்பதில் ஏற்பட்டிருந்த இழுபறி நிலையை அடுத்து மருத்துவ பீடமாணவர்கள் துணைவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு அவரின் செயற்பாடுகளைத் தடுத்த செயற்பாட்டை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது விடயம் தொடர்பாக சங்கத்தின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையின் விபரம் வருமாறு;

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தற்போது பல்கலைக்கழகம் எதிர்கொள்ளும் பல்வேறு பட்ட பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கென அவசர பொதுக்கூட்டமொன்றை கடந்த வெள்ளிக்கிழமை காலை நடத்தியது

இக்கூட்டத்தில் மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான சத்திரச்சிகிச்சை பயிற்சிநெறியினை மீள ஆரம்பிபபது தொடர்பாகவும் பல்கலைக்கழகப் பதிவாளரின் மீள் நியமனம் குறித்து எழுந்துள்ளபிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரச்சிகிச்சை நெறியை மீள ஆரம்பிப்பது தொடாபாக யாழ். போதனாவைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேறகொள்ளவென சங்கத் தலைவா் க.க. அருள்வேல் செயலாளா கலாநிதி செ. இளங்குமரன் உட்பட ஐவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

இதேவேளை, மாணவர்கள் துணைவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு அவரின் செயற்பாடுகளை தடுத்தமை போன்ற செயற்பாடுகளை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன்,மாணவர்கள் தமது பிரச்சினைகளை முன்வைக்கும்போது அல்லது போராட்டங்களை நடத்தும்போது பல்கலைக்கழக சுமுகமான இயக்கத்தை பாதிக்கும் செயல்களில்,வன்செயல்சார் நிர்ப்பந்த நடவடிக்கைளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் ஆசிரியர் சங்கம் அறவுறுத்தியுள்ளது.

மேலும் மருத்துவ மாணவர் சங்கம் மாணவர்கள் தவறான வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியிருப்பதாக தெரிவித்திருபபது கண்டனத்துக்குரியதாகும்.

இத்தகைய எந்தவொரு குற்றச்சாட்டும் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்படவில்லை எனவும் சங்கம தெரிவித்துக்கொள்கிறது.

பதிவாளரின் மீள் நியமனம் தொடர்பான விடயத்தில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கம் எதிர்ப்பு நடவடிக்கைகளை தொழிற்சங்க ரீதியாக மேற்கொள்ளுமிடத்து அச்சந்தாப்பத்தில் ஊழியர் சங்கத்தைச் சாராத ஏனைய ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் சுமூகமான தொழிற்பாட்டுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் எத்தகைய செயற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டாம் எனவும பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## யோகர்சுவாமி குருபூஜை

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ முருகமூர்த்தி வித்தியாசாலை இந்து மாணவ மன்றத்தினரால் வித்தியாலய அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் யோகர் சுவாமிகள் குருபூசை வழிபாடு நடைபெறவுள்ளது.

ஓய்வு பெற்ற அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசனின் "தமிழீழந் தந்த தவஞானி யோககசுவாமிகள்" என்னும் விடயம் குறித்த சிறப்புச் சொற்பொழிவும், ஆசிரியர் சா. முத்துக்குமாரசாமி குழுவினரால் கூட்டு வழிபாடும் மாணவர்களது இயல் இசை,நடன,நாடக நிகழ்வுகளும், மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவாகளது நற்சிந்தனைப் பாடல நிகழ்களும் நடைபெறவுள்ளன.(ற-19)

# 400 பவுண் நகைகள் நெல்லியடியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியிலுள்ள நகைக் கடை ஒன்றின் கூரையை பிரித்து உட்புகுந்த திருடர்கள் 400 பவுண் எடையுடைய தங்க நகைகள் அனைத்தையும் களவாடிச் சென்றுள்ளனர்.

சுமார் 3 கோடி பெறுமதியான நகைகளை பறிகொடுத்த நிலையில் உரிமையாளர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து நெல்லியடி பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி லால்சந்திரசிறி விசேடகை ரேகை நிபுணரை வரவழைத்து கைரேகை அடையாளங்களை பதிவு செய்துள்ளார்.

இத்திருட்டுத்தொடர்பாக வடமாராட்சி அரசியல் துறைப பொறுப்பாளரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்படி கடை அமைந்துள்ள நெல்லியடி பகுதியில் வணிகர்கழகம் இர்வுக்காவல் கடமைக்கென அவர்களிடம் மாதாந்தம் 200 ரூபா அறவிடுகின்றபோதும் மேற்படி நிகழ்வு இடம்பெற்றமை நெல்லியடிப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

(க-101,113,7)

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவபீட 26ம் அணி மாணவன் அமரர் கந்தசாமி சரவணபவனின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று காலை 9.30மணியளவில் மருத்துவ பீட முன்றலில் நடைபெற்றன.

அதன் தொடர்ச்சியாக இரத்ததான நிகழ்வு இன்று காலை 8.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

இநநிகழ்வில் விரும்பிய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார். (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என் மதிப்பில் உயர்ந்த ஒருவரை நான் குருவாக ஏற்றுக்கொள்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். ஒரு கட்டத்தில் அவரை விடவேறொரு சிறந்த குரு அவசியம் என்று எனக்குத் தோன்றினால் -நான் உண்மையாகவும் ஊக்கத்தோடும் முயற்சிசெய்து கொண்டிருந்தேனானால் கண்டிப்பாக அப்படிப் பட்ட குருவைப் பெறும பாக்கியம் எனக்குக் கிடைத்தே தீரும்.

சுவாமி விவேகானந்தர்

# செய்தியாளர்கள் தாக்கப்பட்டமை குறித்து நேற்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மையில இடம்பெற்ற விபத்துச்சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட களேபரங்களில் செய்திசேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம குறித்து நேற்று யாழ்.மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி, வடபிராந்திய கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில்தென்னக்கோன் 512வது படைப்பிரிவின் அதிகாரி மேஜர் வணிகசேகரா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி விபத்தில் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்ட அசம்பாவிதங்களை நேரில்சென்று செய்திசேகரித்த லேக்ஹவுஸ் செய்தியாளர் தாக்கப்பட்டமை, யாழ்.தினக்குரல் செய்தியாளரின் மோட்டார்சைக்கிள் சேதப்படுத்தப்பட்டமை என்பன குறித்து சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடப்பட்டது.

இவ்விடயம் முன்னயதளபதி சரத்பொன்சேகா வழங்கிய உறுதிமொழியை மீறும் செயல்எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துவெளியிட்ட கட்டளைத்தளபதி, படையினர் தவறுகள் செய்வது நிரூபிககப்பட்டால் அதற்கான ஒழுக்காற்று நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும் என்றும் ஊடகவியலாளர்கள் தமக்கு ஏற்படும் இடையூறுகளை தவிர்ப்பதற்கும் படைத்தரப்பினரின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கும் 512வது படைப்பிரிவினைச்சேர்ந்த மேஜர் வணிகசேகராவுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்றும் கூறினார்.

இதேவேளை அசம்பாவிதம் நடைபெறுகின்ற பகுதிகளில் செய்தியாளர்களை அடையாளம காணும் விசேடதிட்டம் அமுல்படுத்துவதற்கு ஏதுவாக தமது தலைமையகத்துடன் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து பின் யாழ். குடாநாட்டில் இருந்து வெளிவரும் நான்கு தினசரிகளின்பிரதம ஆசிரியர்களின கருத்துக்களையும் கேட்டறிந்து திட்டம் அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக கூறினார். (ச)

# அரசுக்கு எதிராக நேற்று திக்வளை நகரில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நூறுமீற்றர் கடற் பாதுகாப்பு எல்லைத்திட்டம் மற்றும் நிரநதர வீடுகள் இதுவரைவழங்கப்படாமை ஸ்வற்றுக்கு எதிர்ப்புத்தெரிவித்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் திக்வளை நகரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தொடர்ந்தும் தற்காலிக வீடுகளில் தங்கியிருக்க முடியாது என்றும் தமக்கு நிரந்தரவீடுகளை வழங்குவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்று தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் தவறியுள்ளதாகவும் குற்றம்சாட்டினர்.

இந்த மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாக திக்வளை பிரதேச செயலாளர் சுமிக் அழகக்கோன் தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இவர்களுக்கான வீடுகள் அமைக்கும் நடவடிக்கை மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் கடற்றொழிலுக்குத் தேவையான உபகரணங்களை முடிந்தளவு விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# ஒஸ்லோவில் எழுச்சி நிகழ்வு

விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் 'தாயக விடுதலைப் பறவைகளின்' 19 கலைஞர்களின் சங்கமத்துடன் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் மாபெரும் எழுச்சி நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் இவ் எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். அகவணக்க நிகழ்வுடன ஆரம்பமான இந்நிகழ்வில், தாயக விடுதலை கானங்கள் முதலில் இசைக்கப்பட்டன.

தொடர்ந்து பாலா ஆசிரியரின் நெறியாள்கையில் 'சூரியதேவியின சோகங்கள்',மற்றும் புதுவை அன்பனின நெறியாள்கையில் 'கரைதேடும் ஓடங்கள்', ஆகிய இரண்டு நாடகங்கள் அரங்காற்றுகை செய்யப்பட்டன. தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு, சிறப்புரை என்பன இடம்பெற்றன. தாயகக் கலைஞர்களுக்கு பொறுப்பாளராக இருந்து வழி நடத்திவரும் போராளி செல்வம் மாமா அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

எந்த சக்தியாலும் தமிழீழப் போராட்டத்தை நசுக்க முடியாது. தேசம் விரைவில் விடியும் என்று தனதுரையில் தெரிவித்த செல்வம் மாமா, ஆழிப்பேரலை தமிழர் தாயகத்தைத் தாக்கிய போது தமிழீழ மக்களுக்கான உயிர்காப்புப்பணிககான நிதிசேகரிப்பில் முனைப்போடு ஈடுபட்ட அனைவருக்கும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு தேசியத்தலைவர் அவர்களின் நன்றித் தகவலை தெரிவித்தார்.

'சுதந்திர தாகம் சுமந்து வந்து வெண்பனி தேசத்தில் கலை விதைத்துச் செல்லும் தாயக விடுதலைப் பறவைகள் கலைஞருக்கு நன்றிகள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட நினைவுக்கேடயம் வழங்கி கலைஞர்கள் சிறப்பிககப்பட்டனர். தமிழர் கலை பண்பாடடுக்கழகத்தின் நோர்வே பொறுப்பாளர் வே.இராஜரட்ணம் கலைஞர்களுக்கு நினைவுக் கேடயம் வழங்கி கௌரவித்தார். (த)

## அதிகார பகிர்வு....

சிங்களவர்கள், முஸ்லிம்கள் என இனங்களைப் பாகுபடுத்துவதற்கு விடுதலைப் புலிகளே காரணமாக அமைந்துள்ளனர்.

எந்தவொரு சமயத்தைப் பின்பற்றும் உரிமையினை நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். தமக்கு விருப்பமான கொள்கையினைக் கடைப்பிடிக்கும் முறையினை நாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இதனால்தான் அமைச்சரவைக்கு விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான சட்டமூலத்தை சமர்ப்பித்தனர்.

எந்தவொரு சமயத்துக்கும் எதிராக இந்தச் சட்டமூலம் இல்லை. ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களை கட்டாயமாக வேறு மதங்களுக்கு மாற்றுவது தான் பிழையானது என அவர் மேலும் தெரிவித்தார். (த-04)

# கூட்டம்

(பொன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவைக்கூட்டம் இன்று பிற்பகல் 5மணிக்கு பல்கலைக்கழக உடற்கல்வி அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கடந்த ஆண்டுககான சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அவை இணைப்பாளர் கேட்டுள்ளார்.(த-49)

## துணைவேந்தரைத்....

வாயில்களைப் பூட்டுதல் சம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முடிவினைப் பரிசீலனைசெய்து இனிவரும் காலங்களில் மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்த தனிப்பீட ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கல். எனினும் பரீட்சைகள் தடைப்படுமிடத்து அதற்கான செயற்பாட்டிற்கு மாத்திரம் அனுமதித்தல்.

◆ ஏற்கனவே தீர்மானித்தபடி நடவடிக்கைக்குழு மூன்று நாட்களுக்கு ஒருதடவை அறிக்கை சமர்பிக்கப்படவேண்டும். அவ்வாறு சமர்பிக்கத் தவறுமிடத்து அதற்குரிய முழுப்பொறுப்பும் துணைவேந்தர் என்பதால் துணைவேந்தருக்கு எதிராக நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும்.

◆ 24 ஆம் திகதிகளுக்குள் பல்கலைக்கழக மானிய ஆணைககுழுத் தலைவர் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தவறுமிடத்து 27ஆம் திகதிக்கு முன்பாக துணைவேந்தர் மற்றும் அவரது உறுப்பினர்கள ஜனாதிபதியைச் சந்தித்து பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். அவ்வாறுசந்திக்கத் தவறுமிடத்து துணைவேந்தர் வளாகத்திற்குள் நுழைவது தடுத்துநிறுத்தப்படும் (ச)

## இராணுவத்தின்...

யில் இவர் மீது முக்கியமாகச் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கிராமத்தில் கருணாவுடன் இணைந்து சிறுவர் போராளிகள் உட்பட 60 பேர் உள்ளதாக இராணுவ வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன. இந்த ஊர் எல்லையில் 12 வயது மதிக்கத்தக்கசிறுவர்கள் ஆயுதங்களுடன் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் செய்தியாளர்களிடம் சிங்களத்தில் பேசியுள்ளனர். தாம் இந்த ஊருக்கு வந்தபோது ஊர்மக்கள் தம்மை நன்றாக வரவேற்று உபசரித்தனர் என்று கூறியுள்ளனர்.

ஆனால் அடுத்த ஊரான கரபொல கிராமமக்கள் தம்மைக் கருணா தரப்பினர் பல்வேறு தொல்லைகளுக்கு உட்படுத்தினர் எனத் தெரிவித்துள்ளனர்.

ஊரிலுள்ள இளைஞர்கள் கருணா தரப்பினரால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும், இரு இளைஞர்கள் மார்ச் 14 அன்று இரவு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் படுகொலைகளுக்கு இராணுவம், விடுதலைப் புலிகளைக் குற்றஞ்சாட்டியிருந்தது. மதி என்பவரின் வழிகாட்டலில் இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

புலிகளின் பெயரால் இப்படு கொலைகளை கருணா தரப்பினர் செய்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தற்போது தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் 16 அன்று அவ்வூர் மக்கள் மேற்படி கொலை செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களது உடல்களை ஊர்வலமாக எடுத்துச்சென்று அப்பிரதேசத்தில் கருணா தரப்பினரின் நடமாட்டத்தையும், நடவடிக்கைகளையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

அப்பிரதேசத்திற்குச் பொறுப்பாகவுள்ள 231 ஆவது பிரிவுப் படையின் பிரிகேடியர் எ.ஹெரத் தெரிவிக்கையில்,

தங்கள் கிராமங்களில் ஆயுதம் ஏந்தியவர்களுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து அக்கிராம மக்கள் தற்போது பின்வாங்கி விட்டனர்.

முதலில் கருணா தரப்பினர் அக்கிராமத்திற்கு வந்தபோது அவர்களை வரவேற்ற ஊர்மக்கள் தற்போது கருணா தரப்பினர் தங்கள் ஊர்களில் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (த-6)

# இரண்டாவது டெஸ்ரில் இந்திய அணி வென்றது

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கல்கத்தா ஈடன் கார்டனில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்கிரிகெற்போட்டியில் இந்திய அணி 195 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன் மூலம் 1:0 என்ற நிலையில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இனிங்சில் 407 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 393 ஓட்டங்களைப்பெற்றது.இரண்டாவது இனிங்சைத்தொடர்ந்த இந்திய அணியினர் 9விக்கெற் இழப்பிற்கு 407 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் 2வது இனிங்சை இடைநிறுத்திக்கொண்டது.

வெற்றி இலக்கான 422 ஓட்டங்களைக்கொண்டு நேற்று முன்தினம் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான அணி கும்பிளேயின் பந்துவீச்சினால் 226 ஓட்டங்களுக்குள் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சஹீற்அப்ரிடி 59 ஓட்டங்களையும் அஸிங்கமால் 50 ஓட்டங்கயும் பெற்றனர். பந்துவீச்சில் கும்பிளே 7விக்கெற்றுக்களையும்ஹர்பஜன்சிங் 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். 2வது டெஸ்ட் போட்டியின் ஆட்டநாயகனாக ராகுல்டிராவிற் தெரிவுசெய்யப்பட்டார். (ச-4)

## புகையிரதத்தில் ....

யிட்டனர். அப்போது இரண்டு கிளைமோர் குண்டுகள் கண்டுபிடிககப்பட்டன.

ஏறாவூர் புகையிரத நிலையத்தில் வைத்து இருவர் மேற்படி பொதியை வெலிக்கந்தையிலுள்ள ஒருவரிடம் ஒப்படைக்குமாறு தந்தாக கைதானவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் நீதிமன்ற உத்தரவின்பேரில் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச)

## சலூனை...

ஒருமாதகால தவணை தருமாறு கேட்டுள்ளார்.

எனினும் அதற்கு மறுப்புத் தெரிவித்த கட்டட உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்று கடையை அடித்துச் சேதப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து வடமராட்சி சிகை அலங்கரிப்புச்சங்கத்திற்கும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருக்கும் அறிவிக்கப்பட்டது. உடன் சம்பவ இடத்திற்குச் சென்ற நியாயம் பேணும் குழுவினர் கடை உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா வழங்குமாறு கட்டட உரிமையாளருக்கு அறிவுறுத்தினர். உடனடியாக நட்டஈடாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. (த-101)

## கட்சி....

வேறுபாறுகளைக் களையவேண்டும் என அவர் கூறினார்.

மேலும் ஜே.வி.பி. எதை விரும்புகிறது என்பதை கூட்டுமுன்னணி அரசு அமைத்தவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். உடன்படிக்கைகளுக்கு முன்னர் ஜே.வி.பியின் விருப்பங்களை அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு கட்சியாக ஒன்றிணைந்தவுடன் தேசிய விவகாரங்கள் தொடர்பில் எவ்வாறு முரண்பட முடியும்? கடந்தவாரம் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை ஜே.வி.பி. எதிர்த்துள்ளது. ஆனால் சுதந்திரக்கட்சி இதற்கு முழு ஆதரவு தெரிவித்தது. இவ்வாறு ஜோன் செனவிரட்ன தெரிவித்தார். (ச-6)

## மாணவர்கள்....

தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மாணவர்களில் ஒரு சிலரை மீண்டும் கைதுசெய்தனர். ஒரு சிலர் அங்கிருந்து தப்பியோடியதாகக் கூறப்பட்டது. மேற்படி சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் என்று கூறப்படுகிறது.

இதேவேளை நேற்றுக்காலை யாழ். நகரிலிருந்து காரைநகருக்கு மினிபஸ்சில் புறப்பட்ட இவர்கள் மினிபஸ்சிற்குள்ளும் அநாகரிகமான செயலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (த)


நிறைஞ்சனாஸ் சங்கானை



TITANIC
(டைட்டானிக் - தமிழாக்கம்)
கா.நே 11.00, 2.45 6.00 (பு.நே)
23.03.2005 முதல்
ஆளவந்தான்

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST
(இயேசு நாதரின் இறுதி 12 மணி நேரக்கதை)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கீதா நடித்த
லண்டன்
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30)



THE ROYAL COLLEGE OF JAFFNA
பாலர் வகுப்பு நடைபெறுகின்றது.
(ஆங்கிலமூலம் ஆங்கிலம். ஏனைய பாடங்கள் தமிழ் மூலம்) பதிவுக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(9400)

கண்ணீர் அஞ்சலி
அமரர் அரியரெட்ணம் சிவகுலரெட்ணம்
எம் சகநண்பன் செந்தூரன் அவர்களின் அன்புத்தந்தையார் அமரர் அரியரெட்ணம் சிவகுலரெட்ணம் அவர்கள் 20.03.2005 அன்று காலமானதையிட்டு துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்
ஆருயிர் நண்பர்கள்
வட்டுக்கோட்டை.
(C-1172)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.